بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ   نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ   وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 10

இதழ் 40

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1447 - ரபீயுல் ஸானீ 09 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - அகா 02 ★ 02 அக்டோபர் 2025

## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا
وَعَمِلُوا الصّٰلِحٰتِ
لَهُمْ اَجْرٌ غَيْرُ مَمْنُوْنٍ ﴿۹﴾

**பொருள்**

**நிச்சயமாக நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் ஆற்றுபவர்களுக்கு என்றும் முடிவடையாத நற்பலன் உண்டு.**

**(ஹாமீம் ஸஜ்தா:9)**

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## இஸ்திஃக்ஃபார் அதிகமாக செய்யுங்கள்.இதனால் பாவங்களும் மன்னிக்கப்படுகின்றன மேலும் அல்லாஹ் சந்ததிகளையும் வழங்கி விடுகிறான்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### இஸ்திஃக்ஃபார் மற்றும் நம்பிக்கை

ஹுஸுர் ! எனக்கு சந்ததிகள் உருவாகிவிட எனக்காக துஆ செய்யுங்கள் என ஒருவர் வேண்டினார். அன்னார் ( ஸல்) கூறினார்கள்:

இஸ்திஃக்ஃபார் அதிகமாக செய்யுங்கள். இதனால் பாவங்களும் மன்னிக்கப்படுகின்றன. அல்லாஹ் சந்ததிகளையும் வழங்கி விடுகிறான். நினைவிற் கொள்ளுங்கள்! நம்பிக்கை பெரும் விஷயமாகும். எந்த நபர் நம்பிக்கையில் முழுமையானவராக இருக்கின்றாரோ அவருக்கு அல்லாஹ் தானே உதவி செய்கின்றான்.

ஒரு சோதனைக்குள்ளான நபர் தொடர்பாக துஆவிற்காக வேண்டப்பட்டது. அப்போது அன்னார் (அலை) கூறினார்கள்:

துஆவோ செய்யப்படுகிறது; ஆனால் சில முறை அல்லாஹ் அந்த நபருக்கு வேறு ஏதாவது அருட்கொடையை வைத்திருக்கின்றான்; வைத்திருக்கக்கூடும். மேலும் துஆ வெளிப்படையான சொற்களில் முழுமை அடைந்து விடுவதாக தென்படுவதில்லை. அதில் ஒரு சோதனை அமைந்திருக்கின்றது. குறிப்பாக எந்த மக்கள் வெளிப்படையில் நல்லவர்களாக இருக்கின்றார்களோ அந்த மக்கள் தொடர்பாக இவ்வாறு அமைகின்றது. ஏனெனில் நாங்களோ நல்லவர்களாக இருந்தோம்; எங்களுக்கு ஏன் சோதனை வந்தது? என்று அவர்கள் கருதுகின்றனர்.

### இறைவன் மீதான நம்பிக்கை

கூறினார்கள்: எமக்கோ இறைவன் மீது எந்த அளவிற்கு நம்பிக்கை உள்ளது என்றால், நாமோ எமக்காக துஆ கூட செய்வதில்லை. ஏனெனில் அவன் எமது நிலையை நன்கு அறிந்திருக்கின்றான்.ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களை நிராகரிப்பாளர்கள் நெருப்பில் போட்ட போது மலக்குகள் வானவர்கள் வந்து, உங்களுக்கு ஏதாவது ஆசை உள்ளதா? என்று ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களிடம் கேட்டனர் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) இவ்வாறு கூறினார்கள்

இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம் ......

## ஆன்மிகத்தின் ஏழாம் படித்தரம் என்பது மனித சிறப்புகளின் கடைசிப் புள்ளியாகும். அதனை அடைந்து விடும்போது அவனுடைய இதயத்தின் கண்ணாடியில் இறைப் பண்புகள் பிரதிபலிக்கத் தொடங்கிவிடுகின்றன

وَلَقَدْ خَلَقْنَا فَوْقَكُمْ سَبْعَ طَرَآئِقَ

(23:18)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் ஆன்மிக படித்தரங்களை விவரித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

அடுத்து மனிதன் இதனையும் கடந்து முன்னால் செல்கிறான். மேலும் ஆறாம் படித்தரம் அவனுக்கு கிடைக்கின்றது. அதாவது அதில் எப்படிப்பட்ட இறையச்சம் உருவாகி விடுகிறது என்றால், அவர் தம்மைத் தாமே இறைவனின் கரத்தில் கொடுத்து விடுகின்றார்.உதாரணமாக அல்லாஹ் கூறுகிறான்:

بَلٰى ۚ مَنْ اَسْلَمَ وَجْهَهٗ لِلّٰهِ وَهُوَ مُحْسِنٌ
فَلَهٗۤ اَجْرُهٗ عِنْدَ رَبِّهٖ ۪ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ
وَلَا هُمْ يَحْزَنُوْنَ ○

எவர்கள் தங்களைத் தாமே முற்றிலும் அல்லாஹ்விடம் ஒப்படைத்து விடுகின்றனரோ மேலும் நற்செயல்கள் ஆற்றுகின்றனரோ அவர்களுக்கு அவர்களின் இறைவனிடத்தில் மிகவும் மகத்தான நற்கூலி விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவர்கள் எல்லா வகையான அச்சம் மற்றும் துன்பத்திலிருந்து பாதுகாப்பாக இருப்பார்கள்.

'மல்கூத்' எனும் நிலையில் , என்னாலும் ஒன்றை செய்ய முடியும்; எனக்கு ஏதாவது கட்டளையிடுங்கள்; நான் ஓடிச் சென்று அதனை நிறைவேற்றுகிறேன் என்று அவர் கருதியிருந்தார்.

ஆனால் 'இந்த நிலையை அடைந்துவிடும் போது மனிதனின் நிலை இவ்வாறாக இருக்கின்றது. அதாவது, ' என்னால் ஒன்றும் செய்ய இயலாது; உனது விருப்பம் எதுவாக இருக்குமோ அதன்படி என்னை நீ வழிநடத்துவாயாக! என்று அவர் கூறுவார்.

இந்த நிலையை மனிதன் அடைந்து விடும்போது, அவனுடைய அனைத்து பணிகளும் இறைவனின் பணிகளாக ஆகிவிடுகின்றன. ஏனெனில் அவர் தன்னை முற்றிலும் இறைவனிடம் நிராயுதபாணியாக ஒப்படைத்துவிடுகின்றார்.

இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம் ......

## நபிமொழி

**எந்த அளவிற்கு ஒருவர் செல்வந்தராக இருக்கின்றாரோ அந்த அளவிற்கு அவர் தேவை உடையவராக இருக்கின்றார்; ஆனால் செல்வத்தை இறைவனின் வழியில் செலவிடுகின்றவரைத் தவிர**

(2388) ஹஸ்ரத் அபூதர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்களுடன் இருந்தேன். அப்போது அன்னார் (ஸல்) உஹது மலையை பார்த்தார்கள். மேலும் கூறினார்கள்:

இது எனது (மலை) ஆகும். இந்த (மலை) தங்கம் ஆக்கப்பட்டு அதிலிருந்து ஒரு தீனார் என்னிடத்தில் மூன்று நாட்களை விட அதிகமாக இருப்பது எனக்கு விருப்பத்திற்குரியது அல்ல. ஆயினும் கடனை திருப்பி செலுத்துவதற்காக வைக்கப்படும் அந்த தீனாரைத் தவிர.

அன்னார் (ஸல்) கூறினார்கள்:

ஒருவர் எந்த அளவிற்கு செல்வந்தராக இருக்கின்றாரோ அவர் அதே அளவிற்கு தேவையுடையவராக இருக்கின்றார். எனினும் எவர் இவ்வாறு செல்வத்தை செலவிடுகின்றாரோ அவரைத் தவிர.

ஹஜ்ரத் சையத் ஜைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் அவர்கள் கூறுகிறார்கள்:

இந்த வாக்கியத்தின் பொருள் என்னவென்றால், செல்வச் செழிப்பு என்பது செல்வத்தை சேகரித்து வைத்துக் கொள்வதில் இல்லை. இன்னும் கூறப்போனால், பெரும்பாலான செல்வந்தர்கள் உயர் நல்லொழுக்கத்திலிருந்து இழப்பிற்குரியவர்களாக இருப்பதன் காரணத்தால் கையில் ஒன்று மற்றவர்களாவர்.

இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம் .....

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹுனைன் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை தொடர்பான ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள் & ஜெர்மனி ஜல்ஸாவில் கலந்து கொள்ளக் கூடியவர்களுக்கு அறிவுரை & உலகின் தற்போதைய சூழல் தொடர்பாக துஆக்களுக்கான வழிகாட்டல்**

பெருமானார் (ஸல்) அவர்கள் செய்த எல்லாப் போர்களிலும் இருந்த ஒரு குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், ஒவ்வொரு போரிலும் போர் நிலைமை எப்படி இருந்தாலும், பெருமானார் (ஸல்) அவர்களின் உறுதியையும், தைரியத்தையும் ஒப்பிட எந்த உதாரணமும் காணக் கிடைக்காது. பெரும் பெரும் வீரர்களின் கால்கள் நிலைகுலையும்போதும், பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு பாறை போல் அங்கேயே உறுதியாக நிற்பதை காண முடியும்

ஹுனைன் போரில் துவக்கத்தில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது. பின்னர் எதிரிகளின் வலிமையான தாக்குதலால் படை சிதறிவிட்டது.மேலும் தற்காலிக தோல்வி ஏற்பட்டது. ஆனால், இறுதியில் முஸ்லிம்களுக்கு மாபெரும் வெற்றி கிடைத்தது நான் பெருமானார் (ஸல்) அவர்களை பார்த்தேன்; அன்னார் ஒரு கோவேறு கழுதையில் அமர்ந்திருந்தார்கள். மேலும், அபூ சுஃப்யான் பின் ஹாரிஸ் அவர்கள் அதன் கடிவாளத்தை பிடித்திருந்தார்கள். அப்போது அன்னார் (ஸல்)

اَنَا النَّبِيُّ لَا كَذِبْ اَنَا ابْنُ عَبْدِ الْمُطَّلِبْ

என்று கூறிக்கொண்டிருந்தார்கள்.

பொருள்: நான் நபி ஆவேன்; இது ஒன்றும் பொய் அல்ல; நான் அப்துல் முத்தலிபின் பேரன் ஆவேன்

---

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 29 ஆகஸ்ட் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஸஹுர்** மாதம் **29 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ

وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹுனைன் போரைப் பற்றிய சில கூடுதல் விபரங்களை இன்று நான் எடுத்துக் கூறுவேன். பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவில் இருந்து புறப்பட்டபோது ஹஸ்ரத் அத்தாப் பின் அஸீத் (ரலி) அவர்களை மக்காவின் அமீராக நியமித்தார்கள். இவர்கள்தான் மக்காவில் நியமிக்கப்பட்ட முதல் அமீராக இருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அத்தாப் (ரலி) அவர்களுக்கு ஏறத்தாழ 20 வயதாக இருந்தது. மக்காவாசிகளுக்கு மார்க்கக் கல்வியை கற்றுக் கொடுக்கும் பொறுப்பை ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள்.

ஹஸ்ரத் அத்தாப் (ரலி) அவர்களின் அறிமுகம் என்னவென்றால், இவர்களின் தந்தை பெயர் அஸீத் பின் அபுல் அய்ஸ் பின் உமைய்யா ˡ என்பதாகும். தந்தை, மகன் இருவரும் குறைஷிய கோத்திரத்தின் தலைச் சிறந்த நபர்களாக இருந்தனர். இஸ்லாத்தின் கடுமையான எதிர்ப்பாளர்களாகவும் இருந்தனர். இவர்களின் தாயாரின் பெயர் ஸைனப் என்பதாகும். அத்தாப் அவர்களின் தந்தை மக்கா வெற்றிக்கு முன்பே இறந்துவிட்டார்கள். அத்தாப் அவர்களுக்கு இஸ்லாத்தின் மீது இருந்த வெறுப்பும், அவர்கள் இஸ்லாத்தை விட்டு விலகி இருந்ததும் எந்த அளவிற்கு இருந்ததென்றால், மக்கா வெற்றியின் போது ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் கஅபாவில் பாங்கு சொன்ன போது, என் தந்தை இந்த பாங்கை கேட்கும் முன் இந்த உலகத்தை விட்டு சென்றதற்கு அல்லாஹ்வுக்கு நன்றி! என்று அத்தாப் தன் தோழர்களிடம் கூறிக் கொண்டிருந்தார்.

எவ்வாறாயினும், அதற்குப் பிறகு மக்கா வெற்றியின் நாளில் அத்தாப் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். ஒரு சமயம் பெருமானார் (ஸல்) அவர்கள் தம்முடைய கனவில் இவர்களின் தந்தை அஸீது பின் அபுல் அய்ஸ்-ஐ இஸ்லாத்தின் நிலையில் மக்காவில் பொறுப்பாளராக கண்டார்கள். அவரோ நிராகரிப்பின் நிலையில் இறந்திருந்தார். தற்போது பெருமானார் (ஸல்) அவர்கள் கண்ட கனவின் விளக்கம் அத்தாப் அவர்களின் வடிவில் வெளிப்பட்டது.

ஓர் அறிவிப்பின்படி, பெருமானார் (ஸல்) அவர்கள் தமது கனவில், அத்தாப் அவர்கள் சொர்க்க வாசலுக்கு வந்து அதை வேகமாக தட்டினார் என்றும், பிறகு வாசல் திறக்கப்பட்டு அதில் அவர் நுழைந்துவிட்டார் என்றும் கூறினார்கள்.

மற்றோர் அறிவிப்பின்படி, அத்தாப்பின் தந்தை அஸீதை நான் சொர்க்கத்தில் கண்டேன்; அவர் இறைமறுப்பு நிலையில் இறந்துவிட்டார்; பிறகு, அவர் எப்படி சொர்க்கத்தில் நுழைந்தார்? என்று நான் வியந்தேன் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மக்கா வெற்றி நாளில் அத்தாப் பின் அஸீது பெருமானார் (ஸல்) அவர்களின் முன்னால் வந்த போது, இவரைத்தான் நான் சொர்க்கத்தில் கண்டேன்; இவரை என்னிடம் அழைத்து வாருங்கள்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். பிறகு அவர் பெருமானார் (ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்பட்டார். பெருமானார் (ஸல்) அவர்கள் அவரை மக்காவிற்கு அமீராக நியமித்து, அத்தாபே! எந்த மக்களுக்கு நான் உங்களை அமீராக நியமித்திருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியுமா? நான் உங்களை 'அஹ்லுல்லாஹ்' அதாவது, அல்லாஹ்வின் வீட்டாருக்கு அமீராக நியமித்திருக்கிறேன்; எனவே, அவர்களிடம் நல்ல விதமாக நடந்து கொள்ளுங்கள்; என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அன்னார் (ஸல்) இதை மூன்று முறை கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மரணிக்கும் வரை அவர்கள் மக்காவிற்கு பொறுப்பாளராக இருந்தார்கள்.

ஓர் அறிவிப்பின்படி, அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலகட்டத்திலும் மக்காவிற்கு பொறுப்பாளராக இருந்தார்கள் என்றும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் காலமான அதே நாளில்தான் இவர்களும் காலமானார்கள் என்றும் வருகிறது. மற்றோர் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலகட்டம் வரையிலும் அவர்கள் உயிரோடு இருந்தார்கள் என்று வருகிறது.

மக்காவில் இருந்து ஹுனைன் நோக்கி புறப்பட்டது பற்றி எழுதப்பட்டுள்ளதாவது, பெருமானார் (ஸல்) அவர்கள் ஹுனைன் போருக்காக ஷவ்வால் 6, சனிக்கிழமை அன்று புறப்பட்டு ஷவ்வால் 10 அன்று ஹுனைன் என்ற இடத்தை சென்றடைந்தார்கள்.

இப்னு கஸீர் அவர்களின் கூற்றுப்படி, ஷவ்வால் 5 அன்று புறப்பட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹுனைன் நோக்கி சென்ற போது அவர்களின் இரண்டு மனைவிமார்களான ஹஸ்ரத் உம்மு ஸல்மா மற்றும் ஹஸ்ரத் ஸைனப் ஆகியோர் உடன் இருந்தார்கள்.

சில அறிவிப்புகளின்படி, ஹஸ்ரத் உம்மு ஸல்மா (ரலி) மற்றும் ஹஸ்ரத் மைமூனா (ரலி) ஆகியோர் இருந்தார்கள். ஆனால், நம்பகமான அறிவிப்புகளின்படி, ஹஸ்ரத் உம்மு ஸல்மா (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) ஆகியோர் உடன் இருந்தார்கள்.ஷரஹ் ஸர்கானீ, தொகுதி 3, பக்கம் 498- 499, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

முஸ்லிம்களின் எண்ணிக்கை குறித்து எழுதப்பட்டுள்ளதென்னவென்றால், ஹுனைன் போரில் இஸ்லாமிய படையினரின் எண்ணிக்கை எதிரிகளின் எண்ணிக்கையை விட குறைவாக இருந்த போதிலும், இதற்கு முந்தைய போர்களை ஒப்பிடும்போது அதிக எண்ணிக்கையில் இருந்தது. எண்ணிக்கை ரீதியாக மட்டுமல்லாமல், ஆயுத ரீதியாகவும்

(அதிக எண்ணிக்கையை கொண்டதாக இருந்தது). இமாம் மகாஸீ அவர்கள், பெருமானார் (ஸல்) அவர்கள் 12,000 முஸ்லிம்களுடன் பயணம் செய்து புறப்பட்டார்கள் என்று எழுதியுள்ளார்கள். மக்கா வெற்றிக்காக மதீனாவில் இருந்து வந்த 10,000 சஹாபிகளும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் வந்தார்கள். (அத்துடன்) மக்காவில் இருந்த 2,000 முஸ்லிம்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் புறப்பட்டுச் சென்றார்கள். சிலர் 14,000 பேர் இருந்ததாகவும் கூறுகிறார்கள். ஆனால், பெரும்பாலும் 12,000 பேர்தான் இருந்ததாகவே குறிப்புகள் கிடைக்கின்றன. மக்காவில் இருந்து 2,000 புதிய முஸ்லிம்கள் சேர்ந்திருந்தார்கள். 14,000 என்று கூறுபவர்கள் மதீனாவிலிருந்து வந்தவர்களின் எண்ணிக்கையை 10,000 -க்கு பதிலாக 12,000 என்று கூறுகிறார்கள். ஆனால், மக்காவில் இருந்து சேர்ந்தவர்களின் எண்ணிக்கையை 2,000 என்றுதான் கூறுகிறார்கள். (தாயிரா மஆருஃப், ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எனும் நூல், தொகுதி 9, பக்கம் 233 - 235, பஸம் இக்பால் லாஹூர்)

ஹுனைன் செல்லும் வழியில், ஸாத்தே அன்வாத்' என்று பெயரிடப்பட்ட ஒரு பெரிய இலந்தை மரம் இருந்தது. அதற்கு இணை வைப்பாளர்கள் அதிக கண்ணியம் கொடுத்து வந்தனர். வெற்றிக்கான சகுனமாக தங்கள் ஆயுதங்களை அதில் தொங்கவிட்டு, அங்கு இஃதிகாஃப் செய்து, அதிக கொள்கைப் பிடிப்பையும், மரியாதையும் செலுத்துவார்கள்.

இஸ்லாமியப் படை அந்த மரத்தின் அருகில் சென்றபோது, மக்காவைச் சேர்ந்த புதிய முஸ்லிம்களில் சிலர் பெருமானார் (ஸல்) அவர்களிடம், எங்களுக்கும் அது போன்ற ஒரு மரத்தை ஏற்படுத்தித் தாருங்கள்! என்று வேண்டிக் கொண்டார்கள்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அல்லாஹு அக்பர்! மூஸா நபியிடம் அவரது சமுதாயத்தினர் கேட்ட அதே விஷயத்தைத்தான் நீங்கள் கேட்டுள்ளீர்கள்;

يٰمُوْسَى اجْعَلْ لَّنَآ اِلٰهًا كَمَا لَهُمْ اٰلِهَةٌ قَالَ
اِنَّكُمْ قَوْمٌ تَجْهَلُوْنَ

(அல் அஃராஃப்: 139)

பொருள்: அப்போது அவர்கள், மூஸாவே! இவர்களின் தெய்வங்களைப் போன்று எங்களுக்கும் ஒரு தெய்வத்தை உண்டாக்கித் தருவீராக!

இதற்கு, நிச்சயமாக நீங்கள் அறிவற்ற மக்களாவீர் என்று மூஸா (அலை) பதிலளித்தார்.

நீங்கள் நிச்சயமாக முந்தைய சமுதாயத்தினரைப் பின்பற்றுவீர்கள்; இவ்வாறே நீங்களும் நடந்துகொள்வீர்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸுனன் திர்மிதி கிதாபுல் ஃபித்ன், ஹதீஸ் எண்: 2180)

ஏற்கனவே கூறப்பட்டது போன்று, ஹுனைன் போரில் எப்படிப்பட்ட புதிய முஸ்லிம்கள் கலந்து கொண்டனர் என்றால், அவர்களின் உள்ளத்தில் இஸ்லாமும் ஈமானும் இன்னும் உறுதியாகியிருக்கவில்லை. அவர்களுக்கு சிறப்பான போர் திறமையும் இருக்கவில்லை. எந்த அளவுக்கென்றால், அவர்கள் ஆயுதங்களுக்கான குறிப்பான ஏற்பாட்டையும் செய்திருக்கவில்லை. இவர்களின் காரணமாகவே ஹுனைன் போரில் முஸ்லிம்கள் நிலை குலைந்து போயினர். அது தற்காலிகமான சிக்கலையும் தற்காலிகமாக பின்வாங்க வேண்டிய நிலையையும் ஏற்படுத்தியது.

இவ்வாறே, மக்காவில் இருந்து முஸ்லிம் அல்லாதவர்களும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் வந்திருந்தார்கள். சிலர் சவாரிகளிலும், சிலர் நடந்தும் வந்தார்கள். எந்த அளவுக்கென்றால், பெண்கள் கூட உடன் வந்தார்கள். போரின் முடிவு என்ன என்பதை பார்ப்பதற்காக வந்தார்கள். முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தால் போர்ச் செல்வம் கிடைக்கும் என்று அவர்கள் வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்கோ அல்லது சஹாபிகளுக்கோ ஏதேனும் துன்பமோ, கஷ்டமோ ஏற்பட்டால் அதனால் அவர்களுக்கு எந்தவித கவலையும் இருந்ததில்லை.இவர்களுடன் ஒரு கூட்டம் வேடிக்கை பார்ப்பதற்காகவே சேர்ந்து வந்தனர். அவர்களில் இணை வைப்பாளர்களும் இருந்தனர்; இணை வைப்பாளர் என்ற நிலையிலேயே அவர்கள் உடன் வந்தனர். இந்த இணை வைப்பாளர்களின் எண்ணிக்கை 80-க்கு அருகில் இருந்ததாக கூறப்படுகிறது. இதன் காரணமாக, சில வாழ்க்கை வரலாற்றாசிரியர்கள், பெருமானார் (ஸல்) அவர்கள் இணை வைப்பாளர்களின் உதவியை நாடிய முதல் போர் இது என்றும், இதற்கு முன்பு பெருமானார் (ஸல்) அவர்கள் எந்த ஒரு இணை வைப்பாளரையும் போரில் சேர்த்துக்கொண்டதில்லை என்றும் கூறுகிறார்கள். ஏனென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறிவந்தார்கள்:

إِنَّا لَا نَسْتَعِيْنُ بِمُشْرِكٍ

பொருள்: நாம் எந்தவொரு இணை வைப்பாளரின் உதவியையும் விரும்புவதில்லை என்று கூறினார்கள்.

ஆனால், அவர்களின் கூற்றுப்படி, ஹுனைன் போரில்தான் முதன் முதலாக இணை வைப்பாளர்களையும் அன்னார் (ஸல்) சேர்த்துக் கொண்டார்கள். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் உதவி பெற்றிருக்கவில்லை என்பதே சரியான விஷயமாகும். பத்ர் போரில் ஒவ்வொரு மனிதரின் தேவையும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்த போதும் கூட, பெருமானார் (ஸல்) அவர்கள் எந்த இணைவைப்பாளரின் உதவியையும் ஏற்க மறுத்து விட்டார்கள். தற்போதோ முஸ்லிம்கள் எந்த அளவிற்கு மிகைத்து இருந்தனர் என்றால், திருக்குர்ஆனின்படி, அவர்களின் அதிக எண்ணிக்கை அவர்களை அகம்பாவத்தில் ஆழ்த்தி விட்டிருந்தது. அவ்வாறிருக்கையில், சொற்ப இணை வைப்பாளர்களின் உதவிக்கு தற்போது என்ன அவசியம் வந்திருந்தது?

ஆகவே, பெருமானார் (ஸல்) அவர்கள் எந்த இணை வைப்பாளரையும் ஒருபோதும் போரில் சேர்த்துக் கொள்ளவில்லை; எந்த இணை வைப்பாளரையும் போரில் சேரச் சொல்லவும் இல்லை. மாறாக, வாழ்க்கை வரலாற்று நூல்களின் விவரங்களிலிருந்து தெளிவாக தெரிவதென்னவென்றால், மக்காவில் இருந்து பலர் தாங்களாகவே, போரைப் பார்ப்பதற்கும், போரில் கிடைக்கும் போர்ச் செல்வங்களின் பேராசையினாலும் இஸ்லாமியப் படையில் சேர்ந்திருந்தார்கள். இவர்களின் நிலைப்பாடு என்னவென்றால், முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைப்பது உறுதி! எனவே, சென்று வேடிக்கை பார்ப்போம்; போர்ச் செல்வங்களை கைப்பற்றி வருவோம் என்பதாக இருந்தது. அத்துடன், சில இணை வைப்பாளர்கள் தீய எண்ணத்துடனும் இருந்தனர். மக்கா வெற்றியில் அவர்களுக்கு ஏற்பட்ட இழிவையும், அவமானத்தையும் அவர்களால் மறக்க முடியாமல் இந்த எண்ணத்துடனும் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

மக்காவில் பெருமானார் (ஸல்) அவர்களை கொல்ல முயன்றது போல இங்கேயும் பெருமானார் (ஸல்) அவர்களை கொல்ல வாய்ப்பு கிடைக்குமோ என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். எதிரிகளால் பெருமானார் (ஸல்) அவர்களை கொல்ல முடியாவிட்டால் கூட, தங்களுக்கு அந்த சந்தர்ப்பம் கிடைத்துவிட்டால், அதைப் பயன்படுத்தி பெருமானார் (ஸல்) அவர்களை கொன்று - நவூது பில்லாஹ் - நாம் பழிக்கு பழி வாங்கிக் கொண்டு நமது உள்ளத்தை தணித்துக் கொள்ளலாம் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

எவ்வாறாயினும், 12,000 பேர் கொண்ட படை மக்காவில் இருந்து புறப்பட்டு மூன்று நாட்களுக்குப் பிறகு, சிலரின் கூற்றுப்படி ஐந்து நாட்களுக்குப் பிறகு ஹுனைன் பள்ளத்தாக்கை அடைந்தது. வழியில் எந்த ஒரு கேடயமோ, வாளோ அல்லது சஹாபிகளின் பொருளோ கீழே விழுந்தால், அபூ ஸுஃபியான் பின் ஹார்ப் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு குரல் கொடுத்து, அந்தப் பொருளை என்னிடம் கொடுங்கள்; நான் எடுத்துக்கொள்கிறேன் என்று கூறினார்கள். இதன் காரணமாக, அவர்களுடைய ஒட்டகம் முழுவதும் பொருட்களால் நிரம்பியது.

ஹஸ்ரத் சஹ்ல் பின் ஹன்ஸலியா அவர்கள் கூறுகிறார்கள்:

ஹுனைன் போரின் போது நான் பெருமானார் (ஸல்) அவர்களுடன் சென்று கொண்டிருந்தேன். நாங்கள் நீண்ட தூரம் பயணம் செய்தோம்; மாலை ஆனது. அப்போது நான் பெருமானார் (ஸல்) அவர்களுடன் சேர்ந்து தொழுதேன். அப்போது ஒருவர் வந்தார். அவர், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் உங்களுக்கு முன்னால் சென்றேன்; இன்னின்ன மலைகளுக்கு மேலே ஏறினேன்; ஹவாஸின் கூட்டத்தினர் தங்கள் பெண்களையும், ஒட்டகங்களையும், ஆடுகளையும், கால்நடைகளையும் ஒன்று சேர்த்ததை கண்டேன் என்று கூறினார்.

பெருமானார் (ஸல்) அவர்கள் புன்முறுவல் செய்து, இன்ஷா அல்லாஹ்! நாளை இவை முஸ்லிம்களின் போர்ச்செல்வமாக இருக்கும் என்று கூறினார்கள். பிறகு, இன்று இரவு நமக்காக யார் காவல் பணியில் இருப்பார்கள்? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். ஹஸ்ரத் அனஸ் பின் அபி மார்ஸத் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் காவல் பணியில் இருப்பேன் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அப்படியானால் புறப்படுங்கள்! என்று கூறினார்கள். அவர்கள் தமது குதிரையில் ஏறி பெருமானார் (ஸல்) அவர்களின் அருகில் வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள், அந்தப் பள்ளத்தாக்கிற்கு சென்று அதன் உயரமான இடத்திற்கு சென்றுவிடுங்கள்; உங்களின் காரணமாக இரவில் நமக்கு ஏதேனும் ஏமாற்றம் ஏற்படக்கூடாது. அதாவது நீங்கள் கவனமற்று இருக்கக்கூடாது; எதிரிகள் ஏமாற்றிவிடக்கூடாது என்று கூறினார்கள்.

அந்த காவல் பணி அன்னாருக்காக கிடையாது. மாறாக, அக்கம்பக்கம் உள்ள பகுதிகளில் இருந்து செய்தி சேகரிப்பதற்காக

அவரை காவல் பணியில் நிற்க வைப்பது பற்றி அன்னார் (ஸல்) கூறினார்கள்.

காலை ஆனதும், பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தொழுகைக்காக புறப்பட்டார்கள். அவர்கள் ஃபஜ்ரு தொழுகையின் இரண்டு ரக்அத் சுன்னத் தொழுதார்கள். தொழுகைக்காக இகாமத் சொல்லப்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் தொழுகை நடத்த ஆரம்பித்தார்கள். அன்னாரின் முகம் பள்ளத்தாக்கை நோக்கி இருந்தது. அன்னார் தொழுகையை முடித்து ஸலாம் கூறிய போது, மகிழ்ச்சி அடையுங்கள்! உங்களுக்கு நற்செய்தி! உங்களின் காவல்காரர் வந்துவிட்டார் என்று கூறினார்கள். அதாவது, கண்காணிப்புப் பணிக்காக நியமிக்கப்பட்டிருந்தவர். சஹாபிகள் பள்ளத்தாக்கிலும், மரங்களிலும் தேட ஆரம்பித்தார்கள். இறுதியில் அவர் வந்தார். பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து நின்றார். அவர் சலாம் கூறி, பெருமானார் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டபடி நான் அந்தப் பள்ளத்தாக்கின் உயரமான இடத்திற்கு சென்றேன்; காலை ஆனதும், இரண்டு பள்ளத்தாக்கிலும் நான் ஏறிப்பார்த்தேன்; ஆனால் யாரும் என் கண்ணில் படவில்லை என்று கூறினார்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், இரவில் நீங்கள் கீழே இறங்கினீர்களா? என்று கேட்டார்கள். அவர், தொழுகைக்காகவும், இயற்கை உபாதைகளுக்காகவும் தவிர இறங்கவில்லை என்று கூறினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், சொர்க்கம் உங்களுக்கு உறுதியாயிற்று; நீங்கள் நன்றாக டியூட்டி கொடுத்தீர்கள் என்று கூறினார்கள்.

இணை வைப்பாளர்களின் உளவாளிகள் பற்றிய குறிப்புகளும் காணக் கிடைக்கின்றன. பெருமானார் (ஸல்) அவர்கள் ஷவ்வால் 10, செவ்வாய்க்கிழமை இஷா நேரத்தில் ஹுனைன் சென்றடைந்திருந்தார்கள். ஹவாஸின் கூட்டத்தைச் சேர்ந்த மூன்று பேரை உளவாளிகளாக அனுப்பி, முஸ்லிம்களின் படையை சுற்றி வந்து ஆய்வு செய்து, அனைத்து விவரங்களையும் வந்து தன்னிடம் கூறும்படி மாலிக் பின் அவ்ஃப் கூறினான். ஆனால், அந்த மூன்று பேரும் திரும்பி வந்த போது திகிலடைந்து போய் இருந்தார்கள்.

உங்களுக்கு கேடு நேரட்டும்! உங்களுக்கு என்ன ஆனது? என்று மாலிக் கேட்டான். அதற்கு அவர்கள், நாங்கள் குதிரைகளில் வெள்ளை ஆட்களை பார்த்தோம்; அல்லாஹ்வின் மீது ஆணையாக! போர் நடந்தால் இந்த நிலையை நம்மால் சமாளிக்க முடியாது. அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாம் பூலோகவாசிகளுடன் போர் செய்ய முடியாத நிலையில் இருக்கும்போது விண்ணுலகவாசிகளுடன் எப்படி போர் செய்ய முடியும்?; நீங்கள் எங்களின் பேச்சை ஏற்றுக் கொள்வீர்கள் என்றால், உங்கள் சமுதாயத்தினருடன் திரும்பிச் சென்றுவிடுங்கள்!; நாங்கள் கண்டதையே மக்களும் கண்டால், எங்களுக்கு ஏற்பட்டது போல அவர்களுக்கும் கஷ்டம் ஏற்படும் என்றனர். அதற்கு மாலிக், உங்களுக்கு அழிவு உண்டாகட்டும்! நீங்கள் படையில் அனைவரையும்விட கோழைகள் என்று கூறினான்.

இந்த செய்தி படை முழுவதுமாக பரவிவிடக்கூடாது; இவ்விஷயம் வெளியே சென்று விடக் கூடாது என்பதற்காக அவர்களை அவன் மறைத்து வைத்தான். பிறகு, (உங்களுள் சிறந்த) வீரர் யாரேனும் உள்ளாரா?; அவரைப் பற்றி எனக்கு கூறுங்கள்! என்று (மாலிக்) கேட்டான். அங்கு இருந்த அனைவரும், ஒரு நபரை குறித்து இவர் மிகவும் வீரர் ஆவார் என்று ஒருமித்த கருத்தை தெரிவித்தனர். பிறகு அவன் புறப்பட்டுச் சென்றான். (மாலிக்) அவனையும் அனுப்பி வைத்தான். இவனும் விரைவாக திரும்பி வந்துவிட்டான். இவனுக்கு முன்பு வந்த மூன்று பேரை போன்று இவனும் பயந்துபோய் இருந்தான். நீ என்ன கண்டாய்? என்று மாலிக் கேட்டான். அதற்கு அந்த வீரன், நான் கருப்பு வெள்ளை குதிரைகளில் வெள்ளை மனிதர்களை கண்டேன். அவர்களை பார்க்கக் கூட எனக்கு துணிவு இருக்கவில்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் காணும் அந்த திகில் எனக்கும் ஏற்பட்டது. என்னால் இதை சமாளிக்க முடியாது. நாம் இங்கிருந்து திரும்பி செல்வதுதான் சிறந்தது! என்று பதிலளித்தான். ஆனால், அவ்வாறிருந்தும் மாலிக் பின் அவ்ஃப் தன் எண்ணத்தில் இருந்து பின்வாங்கவில்லை. எதிரிகளின் உளவாளிகள் எதைக் கண்டு எடுத்துரைத்தார்களோ அதைப் பற்றி வாழ்க்கை வரலாற்றாசிரியர்கள் கூறும்போது, அதற்கு இரண்டு அம்சங்கள் இருக்கலாம் என்று கூறுகிறார்கள். அந்த உளவாளிகள் வானவர்களை கண்டார்கள். அவர்களை கண்டதால் பயந்துவிட்டார்கள் என்று ஒரு சாரார் கூறுகிறார்கள். மற்றொரு கருத்து, அவர்கள் முஸ்லிம்களின் படையை பார்த்தபோது இறைவனுடைய ஆதிக்க அச்சம் அவர்கள் மீது ஏற்பட்டது. அதன் காரணமாக அவர்கள் பயந்துவிட்டார்கள் என்பதாகும்.

ஹஸ்ரத் சலமா பின் அக்வஃ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நாங்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் ஹவாஸின் (கோத்திரத்தின்) மீது தாக்குதல் தொடுத்தோம். அப்போது காலையில் சூரியன் மேலே எழும் நேரத்தில் ஒருவர் ஒட்டகத்தில் வந்தார்; அப்போது நாங்கள் அன்னாருடன் உணவு அருந்திக் கொண்டிருந்தோம்; அவர் தன் ஒட்டகத்தை உட்கார வைத்து கயிற்றால் கட்டினார்; பிறகு எங்களிடம் வந்து எங்களோடு சேர்ந்து உணவு அருந்த ஆரம்பித்தார்;

அதாவது, அவர் சஹாபிகளுடன் அமர்ந்துகொண்டார்.

ஓர் அறிவிப்பின்படி, அவர் மக்களிடம் பேச ஆரம்பித்தார் என்றும் வருகிறது. நாங்கள் மிகவும் சோர்வாக இருந்தோம் என்றும், சவாரிகளும் குறைவாகவே இருந்தன என்றும் பிறகு அந்த நபர் அவர்களுடன் பேசி முடித்த பிறகு வேகமாக தன் ஒட்டகத்தை நோக்கி சென்றார். விரைவாக கயிற்றை அவிழ்த்து, அதன் மீது அமர்ந்து ஒட்டகத்தை வேகமாக விரட்ட ஆரம்பித்தார். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் அதை பார்த்து, இவன் உளவாளி, இவனை பிடித்து கொன்றுவிடுங்கள் என்று கூறினார்கள். பனூ அஸ்லம் கோத்திரத்தை சேர்ந்த ஒருவர் பெண் ஒட்டகத்தில் ஏறிக்கொண்டு அவனைப் பின்தொடர்ந்து சென்றார்.

ஹஸ்ரத் சலமா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் என் பெண் ஒட்டகத்தின் மீது ஏறிக் கொண்டு அவனைப் பின்தொடர்ந்து விரட்டிச் சென்றேன்; அவனை நெருங்கி, முன்னால் இருந்து அவனது ஒட்டகத்தின் மூக்கணாங்கயிற்றை பிடித்தேன்; நான் அவனது ஒட்டகத்தை உட்கார வைத்தேன்; அவன் தன் முழங்காலை தரையில் வைத்தபோது நான் வாளால் அவனை தாக்கினேன்; அந்த மனிதனின் கழுத்தை வெட்டினேன்; அவன் கீழே விழுந்துவிட்டான்; நான் அவனது ஒட்டகத்தையும், ஆயுதங்களையும், அனைத்து பொருட்களையும் எடுத்துக்கொண்டு பெருமானார் (ஸல்) அவர்களிடம் சென்றேன்; பெருமானார் (ஸல்) அவர்கள் மக்களிடம், இவனைக் கொன்றது யார்? என்று கேட்டார்கள். “இப்னு அக்வஃ” என்று சஹாபிகள் கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், இந்த பொருட்கள் அனைத்தும் அவருக்கே சொந்தமானது என்று கூறினார்கள்.

முஸ்லிம்களின் எண்ணிக்கை 12,000 பேருக்கு எதிராக எதிரிகளின் எண்ணிக்கை 30,000 ஆக இருந்தது. ஹுனைன் போரை பற்றி கூறும் போது, சிலசமயம் எதிரிகளின் எண்ணிக்கை 30,000 என்றும், சிலசமயம் 20,000 என்றும், சிலசமயம் 4,000 என்றும் கூறப்படுகிறது. அதன் விவரம் என்னவென்றால், எதிர் தரப்பில் இருந்த எதிரிகளின் எண்ணிக்கை 20,000 ஆக இருந்தது. அவர்களுடன் அவர்களின் மனைவி, பிள்ளைகளை சேர்த்துக்கொண்டால் எண்ணிக்கை 30,000 ஆகிறது. மாலிக் பின் அவ்ஃப் தனது படையில் இருந்து சிறந்த வில்லாளிகளை தேர்ந்தெடுத்து, மலையில் ஒளித்து வைத்திருந்தான். அவர்கள் தக்க சமயத்திற்காக காத்திருந்தார்கள். அவர்கள்தான் முஸ்லிம்கள் மீது திடீரென்று ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்தி இஸ்லாமிய படையில் குழப்பத்தை ஏற்படுத்தினார்கள். இவர்களின் எண்ணிக்கை 4,000 ஆக இருந்தது.

பனூ ஹவாஸின் தளபதியான மாலிக் பின் அவ்ஃப் தனது படைகளை எவ்வாறு வரிசைப்படுத்தியிருந்தான்? என்றால், இரவில் மூன்றில் இரண்டு பகுதி கழிந்துவிட்ட பிறகு மாலிக் பின் அவ்ஃப் தனது படையினரிடம் சென்று, ஹுனைன் பள்ளத்தாக்கில் தீர்மானிக்கப்பட்ட இடங்களில் அவர்களை மறைத்து வைத்தான். அந்தப் பள்ளத்தாக்கு எவ்வாறானதாக இருந்தது என்றால், அதில் பல பள்ளங்கள் இருந்தன. அதில் மக்கள் பரவி இருந்தனர். அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் சஹாபிகள் மீதும் திடீரென்று தாக்குதல் தொடுப்பதற்காக பதுங்கியிருந்தனர். காஃபிர்களின் அணிவகுப்பு எவ்வாறு இருந்தது என்றால், முதலில் குதிரைப் படை, அதற்குப் பிறகு காலாட் படை. அதற்குப் பின்னால் ஒட்டகத்தில் பெண்களும் அவர்களது குழந்தைகளும் இருந்தார்கள். அதற்குப் பின்னால் மற்ற பொருட்களும், ஒட்டகங்களும், ஆடுகளும், மற்ற கால்நடைகளும் இருந்தன.

மக்காவில் இருந்து ஹுனைன் புறப்படும் போது, பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ ஸுலைம் குலத்தைச் சேர்ந்த 1,000 குதிரை வீரர்களை பந்திப்படையாக வைத்திருந்தார்கள். அதன் தலைமை ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இஸ்லாமிய படை ஜிஃரானா என்ற இடத்தை அடைந்தபோது, அதிகாலை நேரத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் முழு படையையும் வலதுபுறம், இடதுபுறம் மற்றும் மத்திய பகுதி என்று பிரித்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மத்திய பகுதியில் இருந்தார்கள். மேலும்,

முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரிகளிடையே பெரிய கொடிகளை பிரித்துக் கொடுத்தார்கள். முஹாஜிர்களின் ஒரு கொடியை ஹஸ்ரத் அலீ அவர்களிடமும், மற்றொரு கொடியை ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களிடமும், மற்றொரு கொடியை ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களிடமும் கொடுத்தார்கள். அன்ஸாரிகளில் இருந்து கஸ்ரஜ் இனத்தின் கொடியை ஹஸ்ரத் ஹூப்பாப் பின் முன்ஸிர் அவர்களிடமும், அவ்ஸ் இனத்தின் கொடியை ஹஸ்ரத் உஸைது பின் ஹுஸைர் (ரலி) அவர்களிடமும் கொடுத்தார்கள். இவ்வாறே, ஹஸ்ரத் அபூ பர்தா பின் நியார், ஹஸ்ரத் அபூ லுபாபா பின் அப்துல் முன்ஸிர் மற்றும் ஹஸ்ரத் கதாதா பின் நுஃமான் அவர்களுக்கும் கொடிகள் கொடுக்கப்பட்டன. இது தவிர, 20 -க்கும் மேற்பட்ட சிறிய கொடிகளையும் பெருமானார் (ஸல்) அவர்கள் பல்வேறு குழுக்களுக்கு பிரித்து கொடுத்தார்கள். தாயிரா மஆருஃப், ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எனும் நூல், தொகுதி 9, பக்கம் 245)

ஹூனைன் போரின் போது குறைந்த எண்ணிக்கையின் காரணமாக இன்று நாம் தோல்வி அடைய மாட்டோம் என்று ஒருவர் கூறினார். அதாவது, இன்று நாம் மிக அதிக எண்ணிக்கையில் இருக்கிறோம் என்று கூறினார். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் இந்தக் கூற்றில் மிகவும் அதிருப்தியடைந்தார்கள். மேலும் திருக்குர்ஆனும் இந்த விஷயத்தை விரும்பத்தகாத ஒன்றாக கருதியவாறு, இவ்வாறு எடுத்துரைக்கின்றது:

إِذْ أَعْجَبَتْكُمْ كَثْرَتُكُمْ

உங்களின் பெரும்பான்மை உங்களை அகம்பாவத்தில் ஆழ்த்திய போது (அத்தவ்பா: 25)

. ஹூனைன் போரில் முதலில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது. பிறகு, எதிரிகளின் கடுமையான தாக்குதலால் குழப்பம் ஏற்பட்டது. இதன் காரணமாக தற்காலிகமாக தோல்வி ஏற்பட்டது. இது பற்றி ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. ஆனால், கடைசியில் முஸ்லிம்களுக்கு மகத்தான வெற்றி கிடைத்தது.

அதன் விவரம் என்னவென்றால், ஹூனைன் போர் பற்றி பொதுவாக கூறப்படுவது என்னவென்றால், முஸ்லிம்களின் படை (அதி)காலை இருளில் ஹூனைன் பள்ளத்தாக்கிற்குள் நுழைந்தது. அப்போது எதிரிகளின் படை ஏற்கெனவே பள்ளத்தாக்கிற்குள் இருந்தது. மேலும், அவர்களின் சிறந்த, திறமையான வில்லாளிகள் அங்குள்ள பள்ளத்தாக்குகளில் ஒளிந்திருந்தனர். முஸ்லிம்கள் இவர்களைப் பற்றி தெரியாமல் பள்ளத்தாக்கிற்குள் நுழைந்த போது, இந்த வில்லாளிகள் திடீரென்று தாக்கினார்கள். இதன் காரணமாக முஸ்லிம்களின் படையில் குழப்பம் ஏற்பட்டது. அவர்கள் பின்வாங்கி ஓட ஆரம்பித்தார்கள். எந்த அளவுக்கென்றால், பெருமானார் (ஸல்) அவர்களும், அவர்களின் சில சஹாபிகளும் மட்டும் அங்கு நின்றிருந்தார்கள். பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் தொடர்ந்து அழைத்த போது, முஸ்லிம்களின் படை மீண்டும் திரும்பி வந்தது. பிறகு, எதிரிகளுடன் ஒரு பெரிய போர் நடந்தது. எதிரிகள் மோசமாக தோல்வியுற்று, போர்க்களத்தை விட்டு ஓடிவிட்டார்கள். இப்னு ஹிஷாமின் வாழ்க்கை வரலாற்றில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், ஸஹீஹ் புகாரியில் உள்ள ஓர் அறிவிப்பை பார்க்கும்போது ஹூனைன் போர் வேறு சில விவரங்களையும் கொண்டுள்ளதை காண முடிகிறது.

ஹூனைன் போரில் கலந்துகொண்ட ஹஸ்ரத் பராஃ பின் ஆஸிப் (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பு ஸஹீஹ் புகாரியில் பல இடங்களில் உள்ளது. அதில் அவர்கள் கூறுகிறார்கள்: நாங்கள் பனூ ஹவாஸின் மீது தாக்குதல் தொடுத்தபோது அவர்கள் தோல்வியடைந்து பின்வாங்கினார்கள். அப்போது நாங்கள் போர்ச்செல்வங்களை சேகரிக்க ஆரம்பித்த சமயத்தில் அவர்கள் எங்கள் மீது அம்பு மழையை பொழிந்தார்கள். அதனால் தங்களைப் பாதுகாக்க எந்த பொருளும் இல்லாத இளைஞர்கள் புற முதுகு காட்டி ஓடினார்கள். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் அப்போதும் போர்க்களத்தில் உறுதியுடன் நின்றிருந்தார்கள்.

அறிவிப்பாளர் பரா பின் ஆஸிப் கூறுகிறார்கள்: நான் பெருமானார் (ஸல்) அவர்களை பார்த்தேன்; அவர்கள் ஒரு வெள்ளைக் கோவேறு கழுதையில் அமர்ந்திருந்தார்கள். அபூ சுஃப்யான் பின் ஹாரிஸ் அவர்கள் அதன் கடிவாளத்தை பிடித்திருந்தார்கள். அப்போது அன்னார் (ஸல்)

أَنَا النَّبِيُّ لَا كَذِبْ أَنَا ابْنُ عَبْدِ الْمُطَّلِبْ

என்று கூறிக்கொண்டிருந்தார்கள். பொருள்: நான் நபி ஆவேன்; இது ஒன்றும் பொய் அல்ல; நான் அப்துல் முத்தலி பின் பேரன் ஆவேன்.

புஹாரீயின் இந்த அறிவிப்பை தவிர்த்து பார்த்தால், ஹூனைன் போருக்கு இரண்டு நிலைகள் உருவாகின்றன. பொதுவாக, வாழ்க்கை வரலாற்றாசிரியர்கள் அவ்வாறுதான் எடுத்துரைக்கிறார்கள். முதலில், திடீர் தாக்குதலால் முஸ்லிம்கள் சிதறிப்போனார்கள். இரண்டாவதாக, முஸ்லிம்கள் மீண்டும் ஒன்று கூடி தாக்குதல் நடத்தி எதிரிகளை தோல்வியுறச் செய்தார்கள். ஆனால், புகாரியின் இந்த அறிவிப்பை அடிப்படையாகக் கொண்டால் - இதுவே மிகவும் சரியானதாக தோன்றுகிறது - ஹூனைன் போருக்கு மூன்று நிலைகள் உருவாகின்றன. முதல் கட்டத்தில், முஸ்லிம்களின் படை எவ்வித தயக்கமும் இன்றி ஹூனைன் பள்ளத்தாக்கிற்குள் நுழைந்தபோது, அவர்களுக்கு முன்னால் இருந்த எதிரிகளின் படை பின்வாங்கிக்கொண்டே போனது. முஸ்லிம்கள் எதிரிகளின் பின்வாங்கலைப் பார்த்தபோது, முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் போர்ச் செல்வத்தை சேகரிக்கத் தொடங்கினார்கள்.

இரண்டாம் கட்டத்தில், பனூ ஹவாஸின் தளபதி மாலிக் பின் அவ்ஃப், தன் அணியில் இருந்த சிறந்த வில்லாளிகள் 4,000 பேரை மறைவான முறையில் பள்ளத்தாக்குகளில் அமர்த்தியிருந்தான். முஸ்லிம்களின் படை பள்ளத்தாக்கிற்குள் வருவதை அவர்கள் கண்டபோது, திடீரென அவர்கள் அம்புகளைக் கொண்டு பலத்த தாக்குதலைத் தொடுத்தனர். பனூ ஹவாஸின் அரேபியாவில் சிறந்த வில்லாளிகளாக இருந்தனர். அதிகாலை இருள் காரணமாகவும், முஸ்லிம்களின் ஒரு பிரிவினர் போர்ச்செல்வங்களை சேகரிப்பதில் ஈடுபட்டிருந்த காரணமாகவும், சேகரிப்பதில் ஈடுபட்டிருந்த அவர்களில் ஒரு பிரிவினர் மக்காவின் புதிய முஸ்லிம்களாக இருந்தனர்; அவர்களின் உள்ளங்களில் இஸ்லாம் இன்னும் ஆழமாக பதிந்திருக்காததன் காரணமாகவும், அவர்களிடம் தற்காப்புக்குரிய தலைக் கவசம், கவச உடைகள் போன்ற எந்த சிறப்பான பாதுகாப்பு சாதனங்களும் இல்லாததன் காரணமாகவும் அம்புகளின் இந்த திடீர் தாக்குதலில் இருந்து தப்பிக்க அவர்கள் அங்கிருந்து ஓடினார்கள். அவர்களுடன் அவர்களது சவாரி கால்நடைகளும் இருந்தன. அவர்கள் திடீரென பின்னோக்கி ஓடியதால், படையில் ஒரு குழப்பம் ஏற்பட்டது. ஒட்டகங்களும், குதிரைகளும் ஓடத் தொடங்கின. விலங்குகள் மிரள ஆரம்பித்தன. பள்ளத்தாக்கின் காரணமாக வழி குறுகலாக இருந்தது. விலங்குகள் மக்களை தம் கால்களால் மிதித்து நசுக்கின. படையில் ஏற்பட்ட இந்தக் குழப்பத்தின் காரணமாக ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் காயமடைந்து குதிரையில் இருந்து கீழே விழுந்தார்கள். முஸ்லிம்களின் படை சிதறிப்போனது. வாழ்க்கை வரலாற்றின் ஒரு புத்தகத்தில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்றாவது கட்டம், தீர்ப்பை வழங்கக்கூடியதாக இருந்தது. அது என்னவென்றால், ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: படையின் முன்பகுதியினர் நிலைகுலைந்தனர். முதலில் பனூ ஸுலைம் பிரிவினர் ஓடினார்கள். அவர்களுக்குப் பின்னால் மக்காவைச் சேர்ந்த புதிய முஸ்லிம்கள். பிறகு, சாதாரண மக்களும் அவர்களுக்குப் பின்னால் தோல்வியுடன் ஓடினார்கள். யாரையும் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. எந்த அளவுக்கு புழுதி கிளம்பியது என்றால், அவர்களில் ஒருவர் கூட தம் உள்ளங்கையை பார்க்க முடியவில்லை.

பெருமானார் (ஸல்) அவர்கள் செய்த எல்லாப் போர்களிலும் இருந்த ஒரு குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், ஒவ்வொரு போரிலும் போர் நிலைமை எப்படி இருந்தாலும், பெருமானார் (ஸல்) அவர்களின் உறுதியையும், தைரியத்தையும் ஒப்பிட எந்த உதாரணமும் காணக் கிடைக்காது. பெரும் பெரும் வீரர்களின் கால்கள் நிலைகுலையும்போதும், பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு பாறை போல் அங்கேயே உறுதியாக நிற்பதை காண முடியும்.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் கூறுகிறார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள் அனைவரையும் விட அழகானவர்களாகவும், அனைவரையும் விட தாராள உள்ளம் கொண்டவர்களாகவும், அனைவரையும் விட தைரியமானவர்களாகவும் இருந்தார்கள்.

இதே ஹூனைன் போரைப் பற்றி குறிப்பிடுகையில் ஹஸ்ரத் பரா பின் ஆஸிப் அவர்கள் கூறுகிறார்கள்: அனைவரும் சிதறிப்போனபோது, பெருமானார் (ஸல்) அவர்கள் தம் சில தோழர்களுடன் தனியாக இருந்தார்கள். எதிரிகள் பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கி முன்னேறி வந்தபோது, அன்னார் தனியாகவே எதிரிகளை நோக்கி முன்னேறிச் சென்றவாறு, உரத்த குரலில், நான் அப்துல் முத்தலிபின் பேரன் என்று கூறிக்கொண்டிருந்தார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! போர்

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

உக்கிரமடையும்போது, நாங்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் தஞ்சம் அடைவோம். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அருகில் இருப்பவர்களே மிகவும் தைரியமானவர்களாக கருதப்பட்டார்கள். இந்த தருணத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் தைரியம் மற்றும் வீரத்தின் மகத்துவம் எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், அன்னார் (ஸல்) தனியாக இருந்தபோதிலும், எதிரிகளை நோக்கி தம் கோவேறு கழுதையை முன்னே ஓட்டிக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நானும் அபூ சுஃப்யான் பின் ஹாரிஸும் பெருமானார் (ஸல்) அவர்களுடனே இருந்தோம், ஒரு நொடி கூட அன்னாரை விட்டு நாங்கள் பிரிந்திருக்கவில்லை. மக்கள் சிதறி ஓடியபோது, பெருமானார் (ஸல்) அவர்கள் தம் கோவேறு கழுதையை எதிரிகளை நோக்கி வேகமாக செலுத்த ஆரம்பித்தார்கள். அப்போது நான் கடிவாளத்தை பிடித்துக்கொண்டு கோவேறு கழுதையை மேலும் வேகமாக போகாமல் தடுத்தேன். அபூ சுஃப்யான் பின் ஹாரிஸ் (ரலி) அவர்கள் கடிவாளத்தின் கொக்கியைப் பிடித்திருந்தார்கள்.

ஓர் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த நேரத்திலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள்; அவர்கள் கோவேறு கழுதையின் கடிவாளத்தை பிடித்து அதை நிறுத்த முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் என்னிடம், அப்பாஸே! மரத்தடியில் இருந்தவர்களை அழையுங்கள்! அதாவது, ஹுதைபியாவின் போது தம் உயிரை தியாகம் செய்ய உறுதிமொழி எடுத்தவர்களை அழையுங்கள்! என்று கூறினார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் உரத்த குரலுக்கு சொந்தக்காரனாக இருந்தேன்; நான் உரத்த குரலில், أَصْحَابَ السَّمُرَةِ என்று அழைத்தேன்.

அதாவது, மரத்தடியில் இருந்தவர்கள் எங்கே இருக்கிறீர்கள்? என்று. அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! மக்கள் என் குரலைக் கேட்டபோது, மாடு தங்கள் கன்றுகளிடம் திரும்புவது போல் அவர்கள் திரும்பினார்கள். நாங்கள் ஆஜராகிறோம்; நாங்கள் ஆஜராகிறோம்! அல்லாஹ்வின் தூதரே! என்று அவர்கள் கூறினார்கள். அவர்கள் பித்தர்களைப் போல் திரும்பி வந்து, எதிரிகளுடன் போர் செய்ய ஆரம்பித்தார்கள். இது ஸஹீஹ் முஸ்லிமில் உள்ள ஓர் அறிவிப்பாகும்.

முஸ்லிம்களின் படை சிதறியபோது, பெருமானார் (ஸல்) அவர்களுக்கருகில் சில நபர்கள் மட்டுமே இருந்தார்கள் என்றும், அவர்களின் எண்ணிக்கை 4 முதல் 300 வரையும் கூறப்படுகிறது. இந்த எண்ணிக்கையில் உள்ள வேறுபாட்டிற்கு ஒரு காரணம், பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அருகில் ஒரு சில நபர்கள் மட்டுமே இருந்தார்கள். மற்றவர்கள் வெவ்வேறு இடங்களில் எதிரிகளுடன் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு, போர்க்களத்தில் சுமார் 300 பேர் இருந்திருக்கலாம். அல்லது பெருமானார் (ஸல்) அவர்களுக்கருகில் இருந்தவர்களின் எண்ணிக்கை வெவ்வேறு நேரங்களில் குறைந்தும், கூடியும் இருந்திருக்கலாம். எனவே, 3 அல்லது 4 நபர்களைப் பார்த்தவர் அந்த எண்ணிக்கையையும், 10 அல்லது 12 நபர்களைப் பார்த்தவர் அந்த எண்ணிக்கையையும், அதற்கும் அதிகமான நபர்களைப் பார்த்தவர் அந்த எண்ணிக்கையையும் கூறியிருக்கலாம். இதுவும் ஒரு காரணமாகும்.

எவ்வாறிருப்பினும், ஒரு தருணத்தில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கருகில் ஒரு சில நபர்கள் மட்டுமே எஞ்சியிருந்தார்கள். மற்றோர் அறிவிப்பின்படி, ஒரு நபர் ஹஸ்ரத் பராஃ அவர்களிடம், அபூ உமாராவே! ஹுனைன் போரின் போது நீங்கள் (அனைவரும்) ஓடிவிட்டீர்களா? என்று கேட்டார். அதற்கு அவர், அல்லாஹ்வின் மீது ஆணையாக! பெருமானார் (ஸல்) அவர்கள் புறமுதுகு காட்டி ஓடவில்லை. ஆனால், பெருமானார் (ஸல்) அவர்களின் தோழர்களில் ஆயுதங்கள் இல்லாத அல்லது குறைந்த ஆயுதங்கள் வைத்திருந்த அவசரப்படுகின்ற இளைஞர்கள் எப்படிப்பட்ட வில்லாளிகளின் கூட்டத்தை எதிர் கொண்டார்கள் என்றால், அம்மக்களின் ஓர் அம்பு கூட இலக்கைத் தாக்காமல் இருந்ததில்லை. அதாவது, ஹவாஸின் மற்றும் பனூ நஸ்ர் போன்ற கூட்டம். அம்மக்கள் தொடர்ச்சியாக அம்பெய்து கொண்டிருந்தார்கள். அவர்களின் அம்பு அரிதாகத்தான் குறி தப்பும். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் எதிரிகளை நோக்கி முன்னேறினார்கள். அன்னார் தம் வெள்ளைக் கோவேறு கழுதையில் அமர்ந்திருந்தார்கள். அபூ சுஃப்யான் பின் ஹாரிஸ் அதை ஓட்டிக்கொண்டிருந்தார். அப்போது அன்னார் கீழே இறங்கி அல்லாஹ்விடம் உதவி கேட்டார்கள். மேலும்

أَنَا النَّبِيُّ لَا كَذِبْ أَنَا ابْنُ عَبْدِ الْمُطَّلِبْ

என்று கூறினார்கள்.

பொருள்: நான் நபி ஆவேன்; இது பொய் ஒன்றும் அல்ல! நான் அப்துல் முத்தலிபின் பேரன் ஆவேன்.

ஹஸ்ரத் அயாஸ் பின் சலமா (ரலி) அவர்கள் தம் தந்தை சலமா பின் அக்வஃ (ரலி) அவர்களிடம் இருந்து அறிவிக்கிறார்கள். அவர்கள் கூறுகிறார்கள்; நாங்கள் ஹுனைன் போருக்காக பெருமானார் (ஸல்) அவர்களுடன் சென்றோம்; நாங்கள் எதிரிகளை சந்தித்தபோது நான் முன்னேறி ஒரு பள்ளத்தாக்கில் ஏறினேன்; அப்போது எதிரி ஒருவனை நான் சந்தித்தேன்; நான் அவனை நோக்கி அம்பு எய்தேன்; அவன் என்னிடம் இருந்து மறைந்துவிட்டான்; அவனுக்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியவில்லை; மக்கள் மற்றொரு பள்ளத்தாக்கில் இருந்து வெளியே வருவதை நான் பார்த்தேன்; அவர்களுக்கும், பெருமானார் (ஸல்) அவர்களின் தோழர்களுக்கும் இடையே போர் நடந்தது. அன்னாரின் தோழர்கள் பின்வாங்கி திரும்பினார்கள்; நான் பின்வாங்கி திரும்பினேன்; என் மீது இரண்டு ஆடைகள் இருந்தன; ஒன்றை நான் கட்டிக்கொண்டிருந்தேன்,; மற்றொன்றை மேலே போட்டிருந்தேன்; எனது ஆடை அவிழ்ந்து கொண்டிருந்தது; நான் இரண்டையும் சேர்த்து பிடித்துக்கொண்டு, பின்வாங்கியவாறு பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்னால் கடந்து சென்றேன்; அன்னார் (ஸல்) கருப்பு, வெள்ளை நிற கோவேறு கழுதையில் இருந்தார்கள்; இப்னு அக்வஃ ஏதாவது கஷ்டத்தை கண்டாரா? என்று கேட்டார்கள். (ஸஹீஹ் புஹாரீ, கிதாபுல் முகாஸீ, ஹதீஸ் எண்: 4317)

அதாவது இந்த நிலையில் ஏன் ஓடுகிறார் என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள்.

ஹுனைன் போரின் போது அம்புகளால் காயமடைந்து (முஸ்லிம்கள்) பின்வாங்கிய சம்பவத்தை பற்றி குறிப்பிடும்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹுனைன் போரில் முஸ்லிம்களின் படை பின்வாங்கியது. ஏனெனில் எதிரிகளின் அம்புகளின் தாக்குதல் கடுமையாக ஆன போது பெருமானார் (ஸல்) அவர்கள் சில சஹாபிகளை மட்டும் அழைத்துக்கொண்டு எதிரிகளை நோக்கி முன்னேறினார்கள். எதிரிகளின் தாக்குதல் கடுமையாக இருப்பதை கண்ட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை தடுக்க முயற்சி செய்தார்கள். அவர்கள் முன்னேறி வந்து பெருமானார் (ஸல்) அவர்களின் குதிரையின் கடிவாளத்தை பிடித்துக்கொண்டார்கள். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள், எனது குதிரையின் கடிவாளத்தை விட்டுவிடுங்கள்! என்று கூறினார்கள். அதற்குப் பிறகு அன்னார் (ஸல்)

أَنَا النَّبِيُّ لَا كَذِبْ أَنَا ابْنُ عَبْدِ الْمُطَّلِبْ

என்ற இந்த கவிதையை பாடிக்கொண்டே முன்னேறினார்கள்.

பொருள்: நான் அல்லாஹ்வின் நபி ஆவேன்; நான் ஒன்றும் பொய்யன் அல்ல! நான் அப்துல் முத்தலிபின் பேரன் ஆவேன்.

நான் அப்துல் முத்தலிபின் பேரன் என்று அவர்கள் கூறியதன் பொருள், அந்த நேரத்தில் எதிரிகளின் தாக்குதல் மிகவும் கடுமையாக இருந்தது. எதிரிகளின் 4,000 வில்லாளிகள் அம்புகளை மழைபோல் பொழிந்து கொண்டிருந்தனர். இந்த நிலையில் நான் முன்னேறுவது மனித நிலையை விட உயர்ந்ததாகத் தெரிகிறது. இதனால் யாரும் ஏமாறக்கூடாது! என்னிடம் ஏதேனும் இறை ஆற்றல் இருப்பதாக நினைக்கக்கூடாது. நான் அப்துல் முத்தலிபின் பேரன்தான். நான் ஒரு மனிதன். நான் ஒரு நபி என்பதால் அல்லாஹ்வின் உதவி மட்டுமே என்னுடன் உள்ளது என்பதாகும்.

அனைத்து மக்களும் ஓடவில்லை என்பது பற்றியும் அறிவிப்புகள் உள்ளன. இமாம் நவவி அவர்கள் எழுதுகிறார்கள்:

எல்லோரும் ஓடவில்லை. மாறாக, பலவீனமான உள்ளம் கொண்ட மக்கத்து நயவஞ்சக மக்களைச் சார்ந்தவர்களும், இந்த போரில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த இன்னும் முஸ்லிமாகாத மக்காவின் இதர மக்களும் ஓட ஆரம்பித்தார்கள். எதிரிகள் ஒரே நேரத்தில் அம்புகளை மழைபோல் பொழிந்ததால் இந்த திடீர் தோல்வி ஏற்பட்டது.

எவ்வாறிருப்பினும், இமாம் நவவி அவர்களின் கூற்றுப்படி, பயம் காரணமாக போர்க்களத்தில் இருந்து ஓடியவர்கள் அனைவரும் முஸ்லிம்கள் அல்ல. அதாவது, அனைவரும் ஓடவில்லை. மக்காவைச் சேர்ந்த புதிய முஸ்லிம்கள் மட்டுமே ஓடினார்கள். அவர்களில் ஒரு பகுதியினர் உள்ளத்தால் போரில் கலந்து கொள்ளவில்லை. போரில் கிடைக்கும் பொருட்களுக்காகவோ அல்லது வேடிக்கை பார்ப்பதற்காகவோ சேர்ந்தவர்கள். ஆனால், அவர்களின் ஓட்டத்தினாலும், அம்புகளின் கடுமையான தாக்குதலாலும் மற்ற முஸ்லிம்களின் சவாரிகளும் மிரண்டு ஓடிவிட்டன என்பதும் உண்மையே! அந்த சவாரிகள் அந்த முஸ்லிம்களை இழுத்துக்கொண்டு ஓடிவிட்டன. இதன் காரணமாக அதிக எண்ணிக்கையிலான மக்கள் பின்வாங்கினார்கள். அவர்கள் வேண்டுமென்றே ஓடவில்லை. ஆனால் மிரண்டுபோன சவாரிகளின் காரணமாக

திரும்பினார்கள். இதன் காரணமாக கலப்பற்ற, நன்றியுள்ள முஸ்லிம்களும் சிறிது நேரம் உதவி செய்ய இயலாமல் இருந்தார்கள்.

எவ்வாறாயினும், இது பற்றிய கூடுதல் விவரங்கள் உள்ளன. அடுத்த முறை அவை விவரிக்கப்படும் இன்ஷா அல்லாஹ்!

இன்று முதல் ஜெர்மனியின் ஆண்டு மாநாடும் தொடங்கியுள்ளது. அங்குள்ள பங்கேற்பாளர்கள் அனைவரும், மாநாட்டின் நோக்கங்களை நிறைவேற்ற அல்லாஹ் அவர்களுக்கு நல்வாய்ப்பு வழங்க வேண்டும் என்று துஆ செய்ய வேண்டும். இதை ஒரு திருவிழா போல கருதி அவர்கள் இங்கு ஒன்று கூடக் கூடாது. இந்நாட்களில் அவர்கள் தம் அறிவு, செயல் மற்றும் ஆன்மிக முன்னேற்றத்தில் தொடர்ந்து முன்னேற உறுதியெடுக்க வேண்டும். அதற்காக அவர்கள் முயற்சி செய்ய வேண்டும். இந்நாட்களில் குறிப்பாக அல்லாஹ்வின் நினைவிலும், துஆக்களிலும் நேரத்தை செலவிட வேண்டும். தங்களுக்காகவும், தங்கள் சந்ததிகளுக்காகவும் துஆ செய்கின்ற அதே நேரத்தில், ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்காகவும், ஒவ்வோர் எதிரியின் தீமைகளிலிருந்தும் அல்லாஹ்வின் பாதுகாப்பில் வருவதற்காகவும், அவர்களின் தீமைகள் அழிக்கப்பட வேண்டும் என்றும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களின் தீமைகளிலிருந்து பாதுகாக்கட்டும்!

பாகிஸ்தானில் அவ்வப்போது ஏதேனும் ஒரு துயரமான சம்பவம் நடந்துகொண்டே இருக்கிறது. அல்லாஹ் விரைவில் அந்த எதிரிகளை பிடிக்க வழிவகை செய்வானாக. பொதுவாக, உலக அமைதிக்காகவும் துஆ செய்யுங்கள். இந்த உலக மக்கள் தங்கள் செயல்களின் காரணமாக தங்கள் அழிவுக்கு அருகில் சென்று கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ் அந்த பயங்கரமான அழிவிலிருந்து நம்மை பாதுகாக்கட்டும்!

பாலஸ்தீனியர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். இஸ்ரேலிய அரசாங்கமோ கொடுமை மற்றும் அநீதியின் உச்சத்தை அடைந்துவிட்டது. பாலஸ்தீனியர்களை இந்த பூமியில் இருந்து முற்றிலுமாக அழிக்க விரும்புவது போல் தெரிகிறது. அப்பாவி குழந்தைகள், பெண்கள், முதியவர்கள், நோயாளிகள் மற்றும் அப்பாவி மக்கள் மீது கொடுமை உச்சத்தை அடைந்துவிட்டது. எல்லா இடங்களிலும் ஒரு படுகொலை நடந்துகொண்டிருக்கிறது. இப்போது சில உலக அரசியல்வாதிகளும் அரசாங்கங்களும், இது தவறு; இதை நிறுத்துங்கள் என்று குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளனர். ஆனால், இஸ்ரேலிய அரசாங்கம் அவர்களின் பேச்சைக் கேட்க தயாராக இல்லை. செல்வம் மற்றும் அதிகாரத்தின் போதை அவர்களையும், அமெரிக்காவையும், அதன் ஆதரவாளர்களையும் அகம்பாவம் மற்றும் கொடுமையின் உச்சத்திற்கு கொண்டு சேர்த்து விட்டது. முஸ்லிம் அரசாங்கங்களும் எதுவும் செய்யவில்லை. அவர்கள் எதுவும் செய்ய முடியாவிட்டாலும், அல்லாஹ் அவர்களுக்கு உதவி செய்ய வருவதற்காக குறைந்தபட்சம் அவர்கள் தங்கள் நிலையை மாற்றி அல்லாஹ்வின் முன்னிலையில் குனிய வேண்டும். அந்தோ! அவர்களுக்கு இந்த அறிவு வரட்டும்! அதேபோன்று, முஸ்லிம்கள் முஸ்லிம்களுக்கு எதிராக கொடுமை செய்கிறார்கள். அல்லாஹ் அவர்களையும் இந்த அநீதியிலிருந்து தடுக்கட்டும்!

இந்த கொடுமைகளுக்கு எதிராக முடிந்தவரை குரல் கொடுப்பது இன்று அஹ்மதிகளின் வேலையாகும். குறிப்பாக துஆக்களை செய்து வாருங்கள்! மன வேதனையுடன் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

(அல் ஃபஸ்ல் இன்டர் நேஷனல், செப்டம்பர் 19, 2025, பக்கம் 2 - 7)

தமிழாக்கம்

முரப்பி

A.P.A. தாரிக் அஹ்மது

* * * * * * * *

**1-ம் பக்கத் தொடர்ச்சி...(மல்ஃபூஸாத்.......)**

ஆம்! ஆசை உள்ளது தான். ஆனால் உங்களுக்கு முன்னால் நிற்பதற்கான ஆசை இல்லை!. அதற்கு, வானவர்கள் கூறினர்; நல்லது! இறைவனுக்கு முன்னாலேயே நீங்கள் துஆ செய்யுங்கள். அப்போது இப்ராஹீம் (அலை) அவர்கள் கூறினார்கள்: அவன் எனது நிலையை எந்த அளவிற்கு அறிந்தவனாக இருக்கின்றான் என்றால் எனக்கு கேட்பதற்கான அவசியம் இல்லை.

(மல்ஃபூஸாத், தொகுதி 2,பக்கம் 88,காதியான் பதிப்பு 2018)

* * * * * * * *

**1-ம் பக்கத் தொடர்ச்சி...(தஃப்ஸீரே கபீர்.......)**

அத்தகைய மக்களை குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல் அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்: அதாவது சில மக்கள் முன்னேற்றமடைந்து முன்னேற்றமடைந்து எப்படிப்பட்ட அந்தஸ்தை அடைந்து விடுகின்றார்கள் என்றால் இறைவன் அவர்களின் கண்களாகவும் காதுகளாகவும் பாதங்களாகவும் ஆகி விடுகின்றான்.

அதாவது அந்த நபருடைய அந்த மக்களுடைய அனைத்து செயல்களும் அசைவுகளும் அவனது விருப்பத்திற்கு ஏற்ப அமைகின்றன. மேலும் அவர்கள் எல்லா சோதனைகள் மற்றும் தடுமாற்றங்களில் இருந்தும் பாதுகாப்பு பெற்று விடுகின்றனர்.

மனிதன் முன்னேற்றம் அடைந்து சென்றடைகின்ற ஏழாவது நிலை என்பது இதுவே ஆகும் . அதாவது இறைவன் இதனை குறித்து

ثُمَّ اَنۡشَاۡنٰهُ خَلۡقًا اٰخَرَ

என்று கூறுகின்றான் பொருள்: அடுத்து அவர் வேறொரு படைப்பாக மாற்றப்படுகிறார். அவருக்கு எப்படிப்பட்ட விண்ணுலக நிறம் பூசப்படுகின்றது என்றால் முன்னரோ இறைவன் கூறியதை கூறி வந்தார். ஆனால் தற்போது அவருக்கு இறைவன் எப்படிப்பட்ட அந்தஸ்தை வழங்குகின்றான் என்றால் அவர் என்னவெல்லாம் கூறுகின்றாரோ இறைவனும் அதற்கு ஏற்பவே தனது கட்டளைகளை செயல்படுத்தி விடுகின்றான்.

ஆக ஒரு வகையில் முன்னரோ இறைவன் அவருடைய கரமாகவும், பாதமாகவும் ஆகியிருந்தான். பின்னர் அவர் முன்னேறி, முன்னேறி எந்த அந்தஸ்தை அடைந்து விடுகின்றார் என்றால் அவரது சொந்த கையும், பாதமும் இறைவனது கரமாகவும்,பாதமாகவும், அவரது நாவு இறைவனின் நாவாகவும் ஆகி விடுகின்றது. மேலும் அவர்

مَا يَنۡطِقُ عَنِ الۡهَوٰى اِنۡ هُوَ اِلَّا وَحۡىٌ يُّوۡحٰى

என்பதை உண்மைப்படுத்துபவராக ஆகிவிடுகின்றார்.

இது மனித சிறப்புகளின் எத்தகைய இறுதிப் புள்ளி என்றால், அதனை அடைந்து இறைப் பண்புகள் அவரது இதயக் கண்ணாடியில் பிரதிபலித்து விடுகின்றன. மேலும் அவர் இறைவனது கம்பீரம் மற்றும் அழகின் வெளிப்பாடாக ஆகிவிடுகின்றார்.

அவருடன் பகைமை கொள்ளக் கூடியவர் இறைவனுடன் பகைமை கொள்ளக் கூடியவராக கருதப்படுகின்றார். அவர் மீது நேசம் கொள்ளக் கூடியவர் இறைவனுடைய பரக்கத்துகள் மற்றும் அருட் கொடைகளுக்கு தகுதியுடையவர்களாக திகழ்கின்றனர். இதே அந்தஸ்தை குறித்து அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் ஓரிடத்தில் சுட்டி காட்டியவாறு இவ்வாறு கூறியுள்ளார்கள்:-

என்னால் நடப்பட்ட தோட்டத்தை வெட்டி விட வேண்டும் என்ற எண்ணத்துடன் சிறிய குத்துவாளையும் கோடாளியையும் எடுத்துக் கொண்டு என்னை நோக்கி ஓடி வந்து கொண்டிருக்கும் மனிதா! நீ தோட்டக்காரனுக்கு அஞ்சிக் கொள்; நான் ஒன்றும் வெட்ட முடிந்த அந்த கிளை இல்லை. உனது திட்டம் எதிராக மாறி உன் மீதே விழும். உனது சதித்திட்டம் சுயமே உன்னையே நாசமாக்கும். ஏனெனில் எனது இறைவன் தலை முதல் பாதம் வரை என்னிடம் மறைந்திருக்கின்றான். தாக்குதல் தொடுப்பவர் என் மீது தாக்குதல் தொடுப்பதில்லை. மாறாக இறைவன் மீது தாக்குதல் தொடுக்கின்றார். இறைவன் மீது தாக்குதல் தொடுப்பதில் வெற்றி பெற முடிந்தவன் எவன் இருக்கின்றான்?(தஃப்ஸீரே கபீர், தொகுதி 6, பக்கம் 147)

* * * * * * * *

**1-ம் பக்கத் தொடர்ச்சி...(நபிமொழி......)**

செல்வத்தை சேகரிப்பதில் செல்வச் செழிப்பு என்பது இல்லை .மாறாக வலமும், இடமும் செலவு செய்வதில் ( செல்வச் செழிப்பு ) இருக்கின்றது.

அதாவது மார்க்கம் மற்றும் பௌதீக தேவைகளில் செலவு செய்வதன் மூலம் செல்வத்தின் நோக்கம் முழுமை பெறுகிறது. எந்த நபர் செல்வத்தை சேகரித்து வைத்தாரோ மேலும் கடமைகளை நிறைவேற்றுவதில் செலவு செய்யவில்லையோ அவரே அனைவரையும் விட பெரிய ஏழையாவார். ஆனால் எந்த நபர் தனது செல்வத்தால் தமது கடமைகளை நிறைவேற்றினாரோ அவரே உண்மையில் செல்வந்தர் ஆவார்.

அதாவது அவர் செல்வத்தின் அசல் நோக்கத்தை அடைந்து விட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய செல்வத்தைக் குறித்த இந்த பார்வை மிகவும் உயர்தரமான ஞானம் மிக்க பார்வையாகும். ( ஸஹீஹ் புஹாரீ, தொகுதி 4, காதியான் பதிப்பு)

* * * * * * * *

**12-ம் பக்கத் தொடர்ச்சி...**
**( ஹுஸூர் கனடா சுற்றுப் பயணம்)**

என்றாலும் கடந்த வருடத்தை ஒப்பிடும்போது இந்த வருடம் ஒரு தெளிவான வித்தியாசம் இருக்கின்றது.மேலும் இந்த கவனம், இந்த ஆர்வம் ஒவ்வொரு வருடமும் முன்னேற்றம் அடைந்து கொண்டே இருக்கும். இன்ஷா அல்லாஹ்!ஹுஸூர் அவர்களின் குரலுக்கு லெப்பைக் கூறியவாறு கனடா அஹ்மதிய்யா ஜமாஅத் முன்மாதிரியை அழகிய முன்மாதிரியை வெளிப்படுத்தியுள்ளது. **(தொடரும்.........)**

தமிழாக்கம்

வாலாஜா D.ஷாஜஹான்

* * * * * * * *

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

## இஸ்லாமிய பர்தாவின் முக்கியத்துவமும் அருள்களும்

**(ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில்)**

**மதிப்பிற்குரிய டாக்டர் மன்ஸூரா அலாவுத்தீன் ஸாஹிபா (சத்ர் லஜ்னா பாரத்)**

(சொற்பொழிவு-காதியான் ஜல்ஸா 2024)

**சென்ற இதழின் தொடர்ச்சி.......**

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தம்முடைய ஒரு சொற்பொழிவில் அஹ்மதி முஸ்லிம் பெண்களும், சிறுமிகளும் உண்மையான முறையில் வெட்கத்தையும், கற்பையும் பாதுகாக்க வேண்டும் என்று கவனமூட்டியவாறு மிகவும் அழகிய முறையில் இவ்வாறு கூறுகிறார்கள்:

நாங்கள் தலையை மறைத்து விட்டோம்; இது போதுமானது என்று சில பெண் பிள்ளைகள் கூறுகிறார்கள். ஆனால் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் எவ்வாறு கட்டளையிட்டுள்ளார்களோ அவ்வாறு தலையை மறைத்திருப்பதில்லை. தலைமுடி தெளிவாக தெரிந்து கொண்டிருக்கும். தலை பாதி மூடி இருக்கும்; பாதி திறந்திருக்கும். கழுத்தும் கூட தெரிந்து கொண்டிருக்கும். கோட் அணிந்திருப்பார்கள் என்றால் முழங்கை திறந்திருக்கும். முழங்கால்களுக்கு மேலே கோட் இருக்கும். **இது ஓர் அஹ்மதி பெண்ணுடைய வெட்கத்தின் தரமும் கிடையாது; அஹ்மதி பெண்ணுடைய சுதந்திரத்தின் வரம்பும்** கிடையாது. மாறாக ஒரு பெண் இந்த வழிமுறையின் மூலமாகவும், இவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்வதாலும் தம் மானத்தின் மீது அவதூறுகளை சுமத்தக்கூடியவளாகவும் ஆகி விடுகிறாள். அவ்வாறே, ஓர் அஹ்மதி என்ற வகையில் தம் சுதந்திரத்தின் வரம்புகளையும் முறித்துக் கொண்டிருப்பாள்.

ஓர் அஹ்மதி பெண் மற்றும் ஓர் அஹ்மதி சிறுமியின் கற்பின் விலை ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான மாணிக்கங்களை விடவும் அதிக மதிப்புள்ளதாகும். ஆகவே அதை பாதுகாக்க வேண்டியதும், பாதுகாப்பதற்கான வழிமுறையை அறிந்து கொள்ள வேண்டியதும் ஓர் அஹ்மதி பெண்ணுக்கு மிகவும் அவசியமாகும். இன்னும் கூறுவதென்றால், அது கடமையும் ஆகும். ஆகவே, எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! ஓர் அஹ்மதி சிறுமி அல்லது அஹ்மதி பெண் தம் வெட்கத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்; தம் கற்பை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்; தம் பரிசுத்தத்தை நிலை நாட்ட வேண்டும். இது இஸ்லாமிய போதனை ஆகும்.

இறையச்சத்தின் படி நடந்தவாறு தம் வாழ்வை கழிக்க வேண்டும். தமது மானம் மற்றும் கற்பை பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் அவள் உண்மையான அஹ்மதி முஸ்லிம் பெண் என்று அழைக்கப்படுவாள். இவ்விஷயம் எல்லா பெண்களிடத்திலும் பொதுவாக காணப்பட வேண்டும்.

ஒரு பெண் இறைவனுடைய நெருக்கத்தை பெற விரும்புகிறாள் என்றால், தம் ஈமானை முழுமைப்படுத்த விரும்புகிறாள் என்றால் அவள் தம்முடைய பரிசுத்தத்தையும் குறிப்பாக கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஓர் அஹ்மதி பெண் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டவாறு, எல்லா தீமைகளை விட்டும் தம்மை தாமே காப்பாற்றிக் கொள்வதாக உறுதிமொழி எடுத்துள்ளாள். அவ்வாறிருக்கும் போது, அவள் தம் கண்ணியம், கற்பு மற்றும் பரிசுத்தம் ஆகியவற்றை மிகவும் அதிகமாக கருத்தில் கொள்ள வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்: கடை வீதிகளிலும், பொழுதுபோக்கும் இடங்களிலும் பர்தாவை கருத்தில் கொள்ளாமல் இருப்பது, ஆண்கள் பெண்கள் இருவரும் கலந்திருக்கும் பார்ட்டிகளில் பர்தா அணியாமல் செல்வது, cousin, class fellow மற்றும் அந்நிய ஆண்களுடன் தேவையற்ற நட்பு, வீணான தேவையற்ற நிகழ்ச்சிகளை பார்ப்பது, அவற்றில் கலந்து கொள்வது, ஜீன்ஸ் உடன் சிறிய பிளவுஸ் அணிவது, வெட்கத்தின் எதிர்பார்ப்புகளுக்கு எதிராக உடை அணிய வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகும் இடங்களில் பணிபுரிவது, சினிமா படங்கள் பார்ப்பது, திருமணங்களில் ஆடுவது ஆகியவை (அனைத்தும்) ஷைத்தானின் தந்திரங்களாகும். அவை பெண்களிடமிருந்து அவர்களின் மானத்தை பறித்து அவளை அழகற்றவளாக ஆக்கி விடுகின்றது.

(ஜுமுஆ குத்பா 9 அக்டோபர் 2011)

கண்ணியத்திற்குரிய சகோதரிகளே! அஹ்மதி மாணவிகள் கல்விக்கூடங்களில் பர்தாவின் தரத்தை நிலை நாட்ட வேண்டும் என்று அறிவுரை வழங்கியவாறு ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்: பெண் பிள்ளைகள் பருவ வயதை அடையும் போது அவளை கவனத்தில் கொள்வது சமூகத்தின் பணியாகும். இஸ்லாம் ஹஜ்ஜை குறித்து கூறும்போது கூட, பெண் தனியாக செல்லக்கூடாது. மாறாக தனது மஹ்ரம் (அதாவது, அவளது கணவன் அல்லது அவளது தந்தை, மகன், சகோதரன் போன்ற திருமணம் முடிக்க ஹராமான ஆண்) ஐ துணைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளது. இன்னின்ன விஷயங்கள் தீமைகள் ஆகும்; அவற்றிலிருந்து நீங்கள் தப்பிக்க வேண்டும் என்று சிறுமிகளுக்கு உணர்த்துங்கள்.

(ஜெர்மனி மாணவிகளுடன் சந்திப்பு 10 ஜூன் 2006)

இதேபோன்று, பெண் பிள்ளைகள் மற்ற நகரங்களுக்குச் சென்று கல்வி கற்பது தொடர்பாக ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: தாய் தந்தையர் அனுமதி வழங்குகிறார்கள் என்றால் பிறகு எங்கு செல்ல வேண்டுமோ அங்கு எங்கு தங்குவது என்பதை பற்றி யோசிக்கலாம்! பெண் பிள்ளைகளுக்கு தனி ஹாஸ்டல் இருக்க வேண்டும். ஹாஸ்டல் தனியாக உள்ளது என்றால் சரி! அங்கு படிக்கும்போது தம்முடைய கண்ணியம் மற்றும் பரிசுத்த தன்மையை கவனத்தில் வைக்க வேண்டியது அவசியமாகும். பெற்றோர்களுக்கு திருப்தி இல்லை என்றால் பிறகு தம் பகுதிகளில் இருப்பதும், அங்கு படிப்பதும்தான் சிறந்ததாகும்! (ஜெர்மனி வாகிஃபாத் நவ் வகுப்பு 18 அக்டோபர் 2011)

பர்தா ஏன் அவசியம்? என்பதை குறித்து மாற்று மத நண்பர்களுக்கு நாங்கள் எவ்வாறு புரிய வைப்பது? என்ற கேள்விக்கு பதில் அளிக்கும் போது ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

முதல் விஷயம், அல்லாஹ் வழங்கிய மார்க்கத்தின்படி செயல்படுவோம் என்று நாங்கள் உறுதிமொழி எடுத்துள்ளோம் என்று அவர்களிடம் கூறுங்கள். பர்தா அணியுங்கள்; அதன் மூலமாக உங்களுடைய sanctity (பரிசுத்த தன்மை) நிலைபெற்றிருக்கும் என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கட்டளையிட்டுள்ளான். சமூகத்தில் ஆண்களுடன் நான் அதிகமாக mixup ஆகிவிடக் கூடாது; எங்களுக்கும் ஆண்களுக்கு இடையில் ஒரு barrier (தடை வேலி) வைக்க வேண்டும் என்ற உணர்வு உங்களுக்கு இருந்து வர வேண்டும்.

அதேபோன்று, தப்லீக் களத்தில் இஸ்லாமிய கட்டளையான பர்தாவை மேற்கொண்டவாறு எவ்வாறு பணியாற்ற வேண்டும்? என்று வழிகாட்டல் வழங்கியவாறு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

இன்டர்நெட்டில் தப்லீஃக் தொடர்புகளை மேற்கொள்ள வேண்டும் என்றால், பெண்கள் பெண்களுடன்தான் தப்லீக் தொடர்பை ஏற்படுத்த வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் பர்தாவின் முக்கியத்துவத்தையும் விவரித்தவாறு கூறுகிறார்கள்:

**எங்கேயாவது ஆண்களை தொடர்பு கொள்ள நேரிட்டால் அங்கு அவர்களுக்கு ஆண்களுடைய முகவரியை கொடுங்கள். உங்களுடைய இடங்களுக்கு பெண்களை மட்டுமே அழைத்து வாருங்கள்.** எங்கேயாவது பெண்கள் முழுமையான முறையில் பதில் அளிக்க முடியவில்லை என்றால் mix gathering நடக்கிறது என்றால் உங்களுடன் அழைத்துச் சென்ற விருந்தாளி பெண்ணுடன் ஓரமாக ஓர் இடத்தில் அமர்ந்து கொள்ளுங்கள். அத்துடன் பர்தாவையும் கவனத்தில் கொள்ளுங்கள். ஆனால் உணவுக்கான நேரம் வரும்போது அந்நேரத்தில் mix gathering இல் அமர்ந்திருக்கக் கூடாது. மாறாக தனியாக enclosure (திரையிடப்பட்டு தடுக்கப்பட்டிருக்கும் பகுதி) -க்கு சென்று விடுங்கள். mix gathering -ல் சந்திக்கக்கூடிய பெண்களிடமிருந்து முகவரியைப் பெற்று அவர்களை பெண்களுடைய சபைகளுக்கு மட்டுமே அழையுங்கள். ஆண்கள் பெண்கள் கலந்திருக்கும் சபைகளுக்கு நீங்கள் ஏன் வருவதில்லை? என்ற கேள்வியும் அப்போது அவர்களின் சிந்தனைகளில் எழும். அந்நேரத்தில் நீங்கள் இஸ்லாமிய பர்தாவைக் குறித்து அவர்களிடம் இருக்கும் தப்பெண்ணங்களையும் உங்களால் அகற்ற

முடியும்.

(லஜ்னா இமாயில்லாஹ் ஜெர்மனி நேஷனல் மஜ்லிஸே ஆம்லா மீட்டிங் 9 ஜுன் 2006)

பெண்கள் வேலைக்கு செல்வது, பர்தா அணிவது தொடர்பாக வழிகாட்டியவாறு ஒரு குத்பாவில் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

ஒரு பெண் இவ்வாறு கடிதம் எழுதியுள்ளார். அவர் கூறுகிறார்: எனக்கு வங்கியில் நல்ல வேலை கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. அங்கு ஹிஜாபோ, பர்தாவோ அணிய கட்டுப்பாடு இருந்தால், கோட் அணிய கூட முடியாது என்றால் நான் அந்த வேலையை தொடரலாமா? ........வேலை செய்யக்கூடிய பெண்கள் வேலை செய்யும் இடத்தில் தம்முடைய புர்கா, ஹிஜாபை கழற்றி வைத்து விட்டு வேலை செய்யலாம் என்று நீங்கள் கூறியுள்ளதாக நான் கேள்விப்பட்டேன் என்று அவர் எழுதியுள்ளார்.

இந்த விஷயத்தை நான் ஏன் எடுத்துரைக்கிறேன்? என்றால், இவ்வாறு ஒரு பெண் கிடையாது; பல பெண்கள் சார்பாக கேள்விகள் வருகின்றன. முதல் விஷயம், நான் அவ்வாறு கூறினேன் என்றால் அது மருத்துவர்களுக்காக கூறினேன். அங்கு சில கட்டாய சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. அங்கு முறையான புர்காவையோ அல்லது ஹிஜாபையோ அணிந்து கொண்டு வேலை செய்ய இயலாது. உதாரணமாக ஆபரேஷன் செய்யும் போது. அங்கு அவர்களுடைய ஆடை எப்படிப்பட்டதாக உள்ளது என்றால், தலை மீதும் தொப்பி இருக்கின்றது; Mask -ம் இருக்கின்றது; தளர்வான உடையும் இருக்கின்றது. அது மட்டுமின்றி டாக்டர்களும் கூட பர்தா அணிந்து கொண்டு வேலை செய்யலாம். ரப்வாவில் நம்முடைய பெண் மருத்துவர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் டாக்டர் ஃபஹ்மீதா. அவரை நான் எப்பொழுதும் பர்தாவில்தான் கண்டுள்ளேன். டாக்டர் நுஸ்ரத் ஜஹான் என்பவரும் இருந்தார். அவரும் எப்பொழுதும் முறையான பர்தாவை அணியக்கூடியவராக இருந்தார்.

ஒவ்வொரு வருடமும் புதிய கண்டுபிடிப்பிற்கு ஏற்ப தம்முடைய தகுதியை அமைத்துக் கொள்வதற்கு அவர் இங்கு லண்டனுக்கும் வந்து செல்வார். ஆனால் எப்பொழுதுமே பர்தாவில்தான் இருப்பார். எந்த அளவுக்கு என்றால், தேவையை விட அதிகமாக பர்தாவை பேணக்கூடியவர்களாக அவர்கள் இருந்தார்கள். அவர்கள் மீது இங்கு எந்த ஒரு நபரும் ஆட்சேபனை செய்யவில்லை; அவர்களின் வேலையின் மீதும் ஆட்சேபனை கிடையாது. பர்தாவின் காரணமாக அவர்களுடைய மருத்துவ பணியும் பாதிக்கப்படவில்லை. அவர்கள் பெரும் பெரும் ஆப்ரேஷன்களையும் செய்திருக்கிறார்கள். எண்ணம் இருக்கும் என்றால், மார்க்க போதனைப்படி செல்லக்கூடிய வழிகளும் திறந்து கொண்டே செல்லும்.

ஒரு ஜுமுஆ குத்பாவில் ஹுஸூர் அவர்கள் இது தொடர்பாக அறிவுரை வழங்கியவாறு கூறுகிறார்கள்:

ஏதேனும் வகையில் சிக்கலில் சிக்கி அவதிப்படும் அஹ்மதி பெண்களுக்கும் நான் கூறிக் கொள்வது என்னவென்றால், உலக விஷயங்களை கண்டு அஞ்சி அல்லது ஃபேஷனில் மூழ்கி தம் ஹிஜாப் மற்றும் பர்தாவை கழற்றி விட்டீர்கள் என்றால் பிறகு உங்களுடைய கண்ணியத்திற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது! உங்களுடைய கண்ணியம் மார்க்கத்தின் கண்ணியத்துடன் இணைந்துள்ளது.

ஹிஜாபுடைய அருள் மற்றும் அல்லாஹ்வுடைய உதவி பற்றி ஒரு சம்பவத்தை ஹுஸூர் அவர்கள் எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:

ஓர் அஹ்மதி பெண்ணிடம் அவருடைய Boss, நீங்கள் ஹிஜாப் அணிந்து கொண்டு அலுவலகத்திற்கு வந்தால் வேலையை விட்டு நீக்கப்படுவீர்கள் என்று ஒரு மாத கெடு கொடுத்து நோட்டீஸ் அனுப்பினார். அந்த பெண் துஆ செய்தார்.

அல்லாஹ்வே! நானோ உன்னுடைய கட்டளைக்கு ஏற்பவே பணியாற்றுகின்றேன். எனக்கு ஏதேனும் வழிமுறையை ஏற்படுத்துவாயாக! இந்த வேலை எனக்கு நல்லதாக இல்லை என்றால் சரி! பிறகு வேறு ஏதேனும் சிறந்த ஏற்பாட்டை செய்வாயாக! என்று துஆ செய்தார்.

எவ்வாறிருப்பினும், ஒரு மாதம் வரை அந்த அதிகாரி அந்த பெண்ணுக்கு நெருக்கடி கொடுத்துக் கொண்டிருந்தார். இத்தனை நாட்கள்தான் எஞ்சியுள்ளன; அதற்குப் பிறகு நீ வேலையை விட்டு நீக்கப்படுவாய் என்று நெருக்கடி கொடுத்துக் கொண்டிருந்தார். இந்த பெண்ணும் துஆ செய்து கொண்டிருந்தார். இறுதியில் ஒரு மாதத்திற்கு பிறகு இந்த பெண் தன் வேலையில் நிலைத்திருந்தார். ஆனால் அந்த அதிகாரி செய்த ஒரு தவறின் காரணமாக அவருடைய உயர் அதிகாரி அவரை வேலையை விட்டு நீக்கி விட்டார் அல்லது வேறு ஓர் இடத்திற்கு அனுப்பி வைத்து விட்டார். இவ்வாறு அவருடைய சிக்கல் தீர்ந்தது. எண்ணம் நல்லதாக இருக்கும் என்றால் அல்லாஹ் வழிவகைகளை ஏற்படுத்தி விடுகின்றான். அல்லாஹ்வுடன் தொடர்பு இருக்கும் என்றால் இறைவன் எப்படிப்பட்ட வழிமுறைகளின் மூலமாக உதவி செய்கிறான் என்றால் அதைக் கண்டு மனிதன் வியப்படைந்து விடுகின்றான். தன்னையுமறியாமல் மனிதனுடைய உள்ளத்தில் அல்லாஹ்வை புகழ்ந்து சொற்கள் வெளிப்படுகின்றன.

(ஜுமுஆ குத்பா 23 ஏப்ரல் 2010, அல்ஃபஸ்ல் இண்டர்நேஷனல் 14 மே 2010)

கண்ணியத்திற்குரியவர்களே! இறுதியாக, நான் உங்களுக்கு முன்னால் கூறிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், எல்லா வகையான ஷைத்தானிய தாக்கங்களிலிருந்து தப்பிப்பதற்கும் நன்மையின் வழிகளில் நிலைபெற்றவாறு வாழ்வை கழிப்பதற்கும் துஆ மிகவும் அவசியமானதாகும்.

அஹ்மதி பெண்கள் துஆக்களின் உதவியுடன் அல்லாஹ்வின் கட்டளையை பேணி நடக்க வேண்டும் என்று கவனமூட்டியவாறு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

அல்லாஹ்விடம் துஆ கேட்க வேண்டும் என்ற கட்டளை உள்ளது. ஆகவே ஒவ்வோர் அஹ்மதி ஆணும், பெண்ணும் துஆ கேட்க வேண்டும். அல்லாஹ்வே! நீ நேர்வழியை வழங்கி இருக்கிறாய் என்றால் அதில் நிலைத்திருக்கக்கூடிய வாய்ப்பையும் தருவாயாக! ஷைத்தானிய எண்ணங்கள் என் மீது மிகைத்து விடாமல் பார்த்துக் கொள்வாயாக என்று துஆ கேட்க வேண்டும்.

இது நடந்து விட்டால், உலக இன்பங்கள், உலக ஃபேஷன் அல்லது நாம் உலகத்திற்கு ஏற்ப நடப்பது; உலகம் நம்மை பார்த்து என்ன கூறும் என்ற தாழ்வு மனப்பான்மை போன்றவை அனைத்தும் பொருளற்றதாக ஆகிவிடும். மார்க்கமும் ஜமாஅத்தும் முன்னுரிமை பெற்று விடும். ஓர் அஹ்மதி பெண் தம் மானத்தை பாதுகாக்க கூடியவளாக ஆகிவிடுவார். தன்னுடைய புகைப்படம் இதழ்களில் அச்சாகி விட்டால் அதனால் என்ன ஆகிவிடப்போகிறது? என்ற எண்ணம் அவருக்கு ஒருபோதும் வராது. மாறாக, இவ்வாறு நடந்து கொள்ளக் கூடாது என்ற அல்லாஹ்வின் கட்டளையான பர்தா அவரை இதிலிருந்து தடுத்துவிடும். அல்லாஹ்வின் ஒவ்வொரு கட்டளையிலும் ஏதேனும் ஒரு நுட்பமும் உள்ளது. பர்தா குறித்த கட்டளையும் கூட, தம் வெட்கத்தை பேண வேண்டும் என்ற கட்டளையும்கூட திருக்குர்ஆனுடைய கட்டளைகளில் ஒரு கட்டளை ஆகும்.

ஆகவே, எவ்வாறிருப்பினும் நான் எனது மானத்தை எனது பர்தாவை பாதுகாக்க வேண்டும். இறைவனுடைய ஒவ்வொரு கட்டளையின்படியும் அமல் செய்ய வேண்டும் அல்லது அமல் செய்ய முயற்சிக்க வேண்டும் என்ற சிந்தனை தோன்றி விடும். இந்த சிந்தனையுடன் ஒவ்வொரு பெண்ணும், ஒவ்வொரு ஆணும் வாழ்வை கழிப்பதற்கு முயற்சி செய்யும்போது, ஷைத்தானிய மற்றும் உலக எண்ணங்களில் இருந்து காப்பாற்றுவதற்கு இது உத்தரவாதம் அளிக்கக் கூடியதாக ஆகிவிடுகிறது.

நம்பிக்கை கொண்டவர்களுக்கு அல்லாஹ் நண்பனாக இருக்கிறான். அல்லாஹ் எவருக்கு நண்பனாக ஆகி விடுவானோ அவரிடம் ஷைத்தான் வருவதற்கான பேச்சுக்கே இடமில்லை!

(யூ.கே ஆண்டு மாநாட்டில் பெண்களுக்கு ஆற்றிய சொற்பொழிவு 8 செப்டம்பர் 2012)

திருக்குர்ஆனின் போதனைகளின்படியும், முழுமையான வழிகாட்டி ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்), ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) மற்றும் கலீஃபத்துல் மஸீஹ் ஆகியோரின் அனைத்து வழிகாட்டல்களின் படியும் அமல் செய்வதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக! பர்தாவின் உண்மையான பொருளை புரிந்து கொண்டு அதன்படி செயல்படக்கூடிய நல்வாய்ப்பை அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக! ஆமீன்!

தமிழாக்கம்
முரப்பி
A.P.A. தாரிக் அஹ்மது

* * * * * * * *

*நபிமொழியிலிருந்து...*

**சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)**

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)


**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

**இந்த *TOLL FREE* எண்ணில்**
**∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.**

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின்**

**கனடா & அமெரிக்க சுற்றுப் பயணம் - 2013**

**(குத்பா நிக்காஹ்வில் மிகவும் முக்கியமான அறிவுரை)**

**முதல் நாளில் இருந்தே நாம் அல்லாஹ்வின் கட்டளையின்படி உண்மையுடன் செயல்பட்டு வருவோம் என்றால் இன்னும் கூறப்போனால் அதில் எந்தவித மாற்றமும் இன்றி உண்மையுடன் செயல்பட்டு வந்தால் மட்டுமே அல்லாஹ்வின் அருளால் உறவுகள் நிலைத்து இருக்க முடியும்**

திருமண உறவுகள் ஏற்படுவதற்கு முன்னரும் அல்லது திருமண பந்தம் ஏற்படும் போதும் மண மகனின் குறைகளும், பலவீனங்களும் பெண்ணின் குடும்பத்தினருக்கும், பெண்ணிற்கும் தெரிந்து இருக்க வேண்டும்.

மேலும், பெண்ணின் குறைகளும், பலவீனங்களும் ஆணிற்கு தெரிந்து இருக்க வேண்டும்

**கனடா ஜாமிஆ அஹ்மதிய்யா இரண்டாம் ஆண்டு பட்டமளிப்பு**

**மே 18 அன்று கனடா வான்கூவரில் அஹ்மதிய்யா பைத்துர் ரஹ்மான் பள்ளிவாசல் திறப்பு விழாவில் பல்வேறு நகரங்களின் அதிகாரிகளின் தரப்பில் இருந்து வந்த** proclamations **காரணமாக அஹ்மதிய்யா** (Ahmadiyya Day) **தினம் கொண்டாடப் பட்டது**

**பைத்துர் ரஹ்மான் பள்ளிவாசல் திறப்பு விழா நிகழ்ச்சி ரேடியோ டிவி மற்றும் பத்திரிகைகளில் விரிவான முறையில் சென்றடைந்தது**

**ஹுஸூர் அன்வர் அவர்கள் ஒரு ஆன்மீக தலைவர் ஆவார்**

**அன்னாரின் தன்மையில் ஒரு ஆன்மீக ஆற்றலும் ஒரு ஈர்ப்பும் இருக்கிறது**

**அன்னாரின் உரை இன்றைய உலகிற்கு அவசியமான ஒன்றாகும்**

**அன்னாரின் உரையில் இருந்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் கடுமையை மேற்கொள்ளும் ஜமாஅத்தல்ல மாறாக அமைதியை விரும்பும் ஜமாஅத் என்று நிரூபணமாகி விட்டது**

**ஹுஸூர் அன்வர் அவர்களின் உரையில் இருந்து இஸ்லாத்தின் புதிய விஷயங்களை நான் கற்றுக் கொண்டேன் ( பைத்துர் ரஹ்மான் பள்ளிவாசல் திறப்பு விழாவில் கலந்து கொண்ட விருந்தினர்களின் கருத்துக்கள் )**

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் வான்கூவர் கனடாவில் மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின் சுருக்கமான அறிக்கை

**அறிக்கை தயாரிப்பு - அப்துல் மாஜித் ஸாஹிப் தாஹிர்**
**(அடிஷனல் வகீலுத் தப்ஷீர், லண்டன்)**

**(பகுதி 4)**

### 18 மே சனிக்கிழமை 2013
### தனிப்பட்ட முறையில் குடும்பங்களுடன் சந்திப்பு

நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 7 மணிக்கு தமது இல்லத்தில் இருந்து புறப்பட்டு சரியாக 7:25 மணிக்கு பைத்துர் ரஹ்மான் பள்ளிவாசலுக்கு வருகை புரிந்தார்கள். ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹுல்லாஹ்) அவர்கள் தமது அலுவலகத்திற்கு வருகை தந்தார்கள்.

பிறகு குடும்பங்களுடனான தனிப்பட்ட முறையிலும் சந்திப்புகள் ஆரம்பமாகின. இன்றைய மாலை அமர்வில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 140 நபர்கள் ஹுஸூர் அவர்களை சந்திக்கும் நல்வாய்ப்பினைப் பெற்றார்கள். ஒவ்வொருவரும் தங்களுடைய பிரியமானவருடன் புகைப்படம் எடுத்துக் கொள்ளும் நல்வாய்ப்பினையும் பெற்றார்கள். வான்கூவர் ஜமாஅத்துகளைத் தவிர்த்து கனடாவின் பிற ஜமாஅத்துகளும் ஸ்காடூன் , வீபேக் டொரன்டோ, மான்ட்ரியால், கேம்லோபஸ் ஆகியவற்றில் இருந்து நீண்ட நெடிய பயணத்தை மேற்கொண்டு இந்தக் குடும்பங்கள் வந்திருந்தன. மிகவும் அதி தொலைவில் இருந்து 4500 கி. மீ பயணம் மேற்கொண்டு இந்தக் குடும்பங்கள் ஹுஸூர் அவர்களை சந்திக்க வந்து இருந்தன .

பிறகு பைத்துர் ரஹ்மான் பள்ளிவாசலிற்கு வருகை தந்து மக்ரிப் இஷா தொழுகைகளை சேர்த்து தொழ வைத்தார்கள்.

### குத்பா நிக்காஹ் சொற்பொழிவு மற்றும் நிக்காஹ் அறிவிப்புகள்

மக்ரிப் இஷா தொழுகைகளுக்குப் பிறகு 5 நிக்காஹ்விற்கான அறிவிப்பை செய்தார்கள். தஷஹ்ஹுத், தவ்வுத் ஓதிய பிற வழக்கமான நிக்காஹ் சம்பந்தமான திருக்குர்ஆன் வசனங்களை ஓதி விட்டு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

இப்போது நான் சில நிக்காஹ்விற்கான அறிவிப்புகளைச் செய்வேன். நிக்காஹ் மற்றும் திருமணத்திற்கான இந்த தருணம் எப்படிப்பட்ட தருணம் என்றால் அது மகிழ்ச்சிக்குரிய தருணமாகும். எவர்களுடைய உறவுகள் நிலைபெற்றுக் கொண்டிருக்கின்றவோ அந்த குடும்பத்தினருக்கு இந்த சந்தர்ப்பத்தால் மகிழ்ச்சிக்கான ஏற்பாடுகள் உருவாகிக் கொண்டிருக்கிறன. எந்த வசனங்கள் தற்போது திலாவத் செய்யப்பட்டனவோ அவற்றின்படியும் மேலும் அல்லாஹ் வழங்கியுள்ள ஏனைய அந்த கட்டளைகளுக்கு ஏற்பவும் செயல்பட வில்லை என்றால் பின்னர் மகிழ்ச்சிக்கான இதே தருணம் மணமகன் மற்றும் மணமகளின் குடும்பங்களுக்கும் வருத்தத்திற்கு காரணியாக ஆகி விடுகின்றது.

நிகழும் ஒவ்வொரு நிக்காஹ்வும் அல்லது என்னிடம் நிக்காஹ் ஓதுமாறு கூறப்படுகிறது. இன்றைய காலத்தில் உறவுகளின் நிலை எப்படி இருக்கிறது என்றால் உள்ளத்தில் பெண்ணைக் குறித்து கவலை ஏற்படுகின்றது; அதாவது, எந்த வீட்டிற்கு இந்தப் பெண் செல்கிறாளோ அந்த வீடு இந்தப் பெண்ணை நல்ல முறையில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இறைவன் ஆக்க வேண்டும்; இறைவன் அவ்வாறே செய்வானாக! திருமணம் ஆணிற்கும் பெண்ணிற்கும் உரியது.







சந்தேகமின்றி ஆணே பெண்ணை தனது வீட்டில் நல்ல முறையில் வைத்துக் கொள்வதற்கு முதல் பொறுப்பாளியாவான். ஆனால், ஆணின் தாயும், தந்தையும் பொறுப்பாளி ஆவார்கள். இவ்வாறே சில வேளைகளில் எப்படிப்பட்ட நிலைமைகளும் இருக்கின்றன என்றால், பெண்கள் கணவனுக்குரிய அந்த உரிமைகளையும், கணவரின் பெற்றோருக்குரிய அந்த உரிமைகளையும் நிறைவேற்றுவதில்லை. மேலும் முதல் நாளில் இருந்தே அவர்களின் கோரிக்கைகள் துவங்கி விடுகின்றன.

முதல் நாளில் இருந்தே demanding செய்கின்றனர். இதனால் அவர்களின் கவலை அதிகரித்து விடுகிறது. பிறகு மெல்ல மெல்ல உறவுகளில் விரிசல் ஏற்பட்டு விடுகிறது.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

ஆக, நான் முதலில் கூறிய அதே விஷயம் தான். அசல் விஷயம் இதுவே ஆகும். அதாவது, மகிழ்ச்சிகரமான அந்த தருணத்தில் இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள் என்ற இந்த அறிவுரையை அல்லாஹ் செய்துள்ளான். இறையச்சம் என்ற சொல்லை பல முறை பயன்படுத்தியுள்ளான். இது எதனால் என்றால் உண்மையுடன் செயல்படுங்கள்; நேர்மையான கூற்றுடன் செயல்படுங்கள் என்ற இந்த விஷயங்கள் மீண்டும் மீண்டும் நினைவில் வந்து கொண்டிருக்க வேண்டும் என்பதால் ஆகும்.

உறவுகள் ஏற்படுவதற்கு முன்னரும் அல்லது திருமண பந்தம் ஏற்படும் போதும் மண மகனின் குறைகளும், பலவீனங்களும் பெண்ணின் குடும்பத்தினருக்கும், பெண்ணிற்கும் தெரிந்து இருக்க வேண்டும். மேலும், பெண்ணின் குறைகளும், பலவீனங்களும் ஆணிற்கு தெரிந்து இருக்க வேண்டும்.

கனடாவில் முன்னரே இங்கு வசிக்கும் மக்கள் இருக்கின்றார்கள். இங்கு எப்படிப்பட்ட திருமண பந்தங்கள் இருக்கிறன என்றால், இங்கு மட்டும் அல்ல மேற்கத்திய நாடுகளிலும் பல இடங்களில் இவ்வாறு நடக்கின்றது. அதாவது, பாகிஸ்தானிலிருந்து ஆணை இங்கு திருமணத்திற்காக கொண்டு வரும்போது, கிராஜுவேட் படித்துள்ளார்; மாஸ்டர் டிகிரியை முடித்துள்ளார் என்று தவறான கூற்றை கூறுகின்றனர். அது பற்றி விசாரிக்கும் போது, அவர் சாதாரண கல்வியே பயின்றிருக்கின்றார் என்று தெரிய வருகிறது. மேலும், இங்குள்ள பெண்களோ நன்கு படித்தவர்களாக இருக்கிறார்கள்.

முதல் நாளிலிருந்தே கவ்லே சதீதை (நேர்மையான கூற்றை) மேற்கொண்டிருந்தால் பின்னர் குறைவாக படித்திருப்பது ஒன்றும் என்பது ஆண் மார்க்கத்தை விட்டு விலகி இருப்பதை விட பெரிய குறையும் ஒன்றும் கிடையாது. அல்லது பெண் செல்வந்தராக இருப்பது அல்லது தோற்றத்தில் அழகாக இருப்பது போன்றவை ஒன்றும் பெரும் ஒன்றும் கிடையாது. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல் அவர்கள் கூறியது போல அவருடைய பெரும் சிறப்பு இதுவாகும். அதாவது அன்னார் (ஸல்) கூறினார்கள்:

நீங்கள் பார்க்க வேண்டியது (மணமகளாகிய) அவள் அல்லது (மணமகனாகிய) அவர் மார்க்கப் பற்று உள்ளவரா ? இல்லையா ? என்பதே ஆகும். நீங்கள் இந்த சிறப்புகளைப் பார்த்தால் தவறான தகவல்களை தர வேண்டியது இருக்காது. மேலும் பந்தமும் நிலைபெற்றிருக்கும்.

எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, மார்க்கப் பற்றைப் பார்த்தோம் என்றால், பிறகு பெண்ணும் மார்க்கப் பற்றைப் வைத்து தனது கணவரை தேடுவார். மேலும் எப்படிப்பட்ட ஆணுடன் திருமணம் செய்ய விரும்புவாள் என்றால், அவரும் மார்க்கப் பற்றுள்ளவராக இருக்க வேண்டும்; மேலும் அவரது குடும்பத்தினரும் மார்க்கப் பற்றுள்ளவராக இருக்க வேண்டும்; மேலும் அந்தக் குடும்பத்தில் கண்ணியமும் இருக்க வேண்டும். மேலும், இப்படிப்பட்ட ஆணைத் தான் பெண்ணும் தேடுவாள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆணும் இதனைப் பார்க்க வேண்டும்; அதாவது நான் மார்க்கப் பற்றுள்ள பெண்ணைத் தான் திருமணம் செய்வேன் என்று நிலைப்பாட்டில் இருக்க வேண்டும். அவ்வாறு செய்தால், ஆண்களுக்குள்ளும், சுதந்திரம் ஏற்பட்டு விடுகிறது. அதாவது தனித்து விடப்படுகின்றனர். இவ்வாறு செய்தால் பின்னர் அந்த நிலைகளில் குறைவு ஏற்படும்.

இங்கு இருக்கும் இந்த சூழலில் வந்து ஆண்கள் திருமணம் செய்கிறார்கள். பெண்கள் பாகிஸ்தானில் இருந்து அல்லது பல்வேறு நாடுகளில் இருந்து வருகிறார்கள் அல்லது தங்களை தங்களை ஹிஜாபில் வைக்கக் கூடிய பெண்கள் இருக்கின்றனர்; மேலும் அவர்கள் தங்களை பர்தாவில் வைக்க விரும்புகின்றனர். இப்படிப்பட்ட பெண்களுடன் கடைவீதிகளில் செல்லும் போது சில கணவன் மார்களுக்கு வெட்கம் ஏற்படுகிறது.

திருமண பந்தம் ஏற்பட்டு விட்ட பிறகு அவர்களின் ஹிஜாபுகள் கழற்றி விடப்படுகின்றன அல்லது இந்த சூழலுக்கு ஏற்ப உனது ஆடை சரியானதாக இல்லை என்று அவர்களிடம் கூறப்படுகிறது. பெண் நல்லவராகவும், மார்க்கப் பற்றுள்ளவராகவும் இருந்தால் பின்னர் அங்கு இதன் காரணமாக ஒரு புதிய பகைமைக்கான தொடர் துவங்கி விடுகிறது. சில சமயங்களில் இது அதிகரித்து உறவுகள் முறிந்து விடும் அளவிற்கு நிலைமை சென்று விடுகிறது. இதற்கு பொறுப்பு குத்தாமுல் அஹ்மதிய்யாதான் என்று புகார்களும் வந்து வருகின்றன.

இவ்வாறே எங்களுக்கு இன்ன இன்ன டிமான்ட்கள் இருக்கின்றன ; அதனை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று சில பெண்கள் டிமான்ட்கள் செய்கின்றனர். அப்படி ஆண் நிறைவேற்றவில்லையென்றால், பின்னர் அங்கு உறவுகள் முறிந்து விடுகின்றன.

ஆக, எவ்வாறிருப்பினும், முதல் நாளில் இருந்தே நாம் உண்மையை மேற்கொள்ள வேண்டும்; உண்மையைப் பேச வேண்டும் என்ற அல்லாஹ்வின் கட்டளையின் படி நாம் செயல்பட்டோம் திருமண பந்தங்கள் அல்லாஹ்வின் அருளாலும், கருணையினாலும் உறவுகள் நிலைத்து இருக்கின்றன. மேலும் எவ்வித ஒளிவு மறைவும் இல்லாத உண்மை பேச வேண்டும். அவ்வாறு செய்தால் திருமண பந்தம் நிலைபெற்றிருக்கும்.

இறைவனுடைய திருப்தியைப் பெறுவதற்காக உறவுகள் நிலை பெறுகின்றன. மேலும் எதிர்கால சந்ததிகளும் மார்க்கப் பற்று உள்ளவர்களாகவும், ஜமாஅத்துடன் தொடர்புள்ளவர்களாகவும் இருக்கின்றனர். எனவே புதிதாக திருமண பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளும் ஒவ்வொருவரும் இதன் பக்கம் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். இதற்கு எதிரில் உலக அந்தஸ்தையோ, உலக விஷயங்களையோ பார்க்கக் கூடாது.

எனவே நாம் இதனை மேற்கொண்டோம் என்றால், மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளையின் படி செயல் பட்டோம் என்றால், உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமைக் கொடுத்தோம் என்றால், பிறகு பெற்றோர்களின் மன வருத்தத்திற்கு காரணமாக இருக்கும் விஷயங்கள் ஏற்படாது.

இன்று ஏற்படும் இந்த உறவுகள் அனைத்தும் அல்லாஹ்வின் அருளால் வெற்றிகரமாக அமையட்டும்! மேலும் அனைத்து விஷயங்களிலும், தமது ஒவ்வொரு கோரிக்கைகளிலும் மேலும் மற்ற விருப்பங்களிலும் மார்க்கத்திற்கே முன்னுரிமை வழங்கக் கூடியவர்களாக இவர்கள் திகழ வேண்டும். இறைவன் அவ்வாறே செய்வானாக!

இந்த சில சொற்களுக்குப் பிறகு தற்போது நான் சில நிக்காஹ்விற்கான அறிவிப்புகளை செய்கிறேன்;

இந்த நிக்காஹ் குத்பாவிற்குப் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கீழ்கண்டவர்களின் நிக்காஹ்களை அறிவித்தார்கள்:

1) மதிப்பிற்குரிய சலீம் அஹ்மத் ஸாஹிப் அவர்களுடைய மகளாகிய அஸீஸா நாஜியா சலீம் ஸாஹிபா அவர்களின் நிக்காஹ் அமீர் மற்றும் முபல்லிஃக் இன்சார்ஜ் மதிப்பிற்குரிய தாஹிர் மஹ்மூது சவூத்ரி ஸாஹிப் அவர்களுடைய மகன் அஸீஸம் ஸாஹித் மஹ்மூது சவூத்ரி ஸாஹிப் உடன் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

2) மதிப்பிற்குரிய மஹ்மூது கும்ஸின் ஸாஹிப் அவர்களின் மகள் அன்பிற்குரிய அஸீஸா தானியா ஆரீஃப் கும்ஸின் ஸாஹிபா அவர்களுடைய நிக்காஹ் மதிப்பிற்குரிய பஷாரத் அஹ்மது பாஜ்வா அவர்களின் மகன் அஸீஸம் முபாரக் அஹ்மது பாஜ்வா அவர்களுடன் நிச்சயிக்கப்பட்டு உள்ளது.

3) மதிப்பிற்குரிய நஸீர் அஹ்மது ஸாஹிப் அவர்களின் மகள் அஸீஸா ரிஸ்வானா



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 Thursday 02 OCTOBER 2025 Issue No.40

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

தஸ்னீம் ஸாஹிபா அவர்களுடைய நிக்காஹ் மதிப்பிற்குரிய ஜாவேத் அஹ்மது ஸாஹிப் அவர்களின் மகன் அஸீஸம் ஃபரீத் அஹ்மது ஸாஹிப் ஸாஹிப் அவர்களுடன் நிச்சயிக்கப்பட்டு உள்ளது.

4) மதிப்பிற்குரிய அப்துல் குத்தூஸ் தாஸிர் ஸாஹிப் அவர்களின் மகள் அஸீஸா அமத்துல் தாஸீர் ஸாஹிபா அவர்களுடைய நிக்காஹ் மதிப்பிற்குரிய மிஸ்பாஹூத் தீன் அஹ்மது அவர்களின் மகன் அஸீஸம் ராஹீல் வகாஸ் அஹ்மது ஸாஹிப் அவர்களுடன் நிச்சயிக்கப்பட்டு உள்ளது.

5) மதிப்பிற்குரிய ஷரீஃப் அஹ்மது ஸாஹிப் அவர்களின் மகள் ஃபரிஹா ஷரீஃப் அஹ்மது ஸாஹிபா அவர்களுடைய நிக்காஹ் மதிப்பிற்குரிய அப்துல் கஃபூர் முபஷ்ஷிர் அவர்களின மகன் அஸீஸம் அப்துந்நூர் ஆபித் ஸாஹிப் அவர்களுடன் நிச்சயிக்கப்பட்டு உள்ளது. (அஸீஸம் அப்துந் நூர் ஆபித் ஸாஹிப் அவர்கள் வக்ஃபே நவ் ஆக இருக்கிறார். மேலும் ஜாமிஆ அஹ்மதிய்யா கனடாவின் மாணவராக இருக்கிறார்.)

இந்த நிக்காஹ் அறிவிப்புகளுக்குப் பிறகு ஹுஸூர் அன்வர் அவர்கள் மணமக்களுக்காக துஆ செய்தார்கள்.

**மே 19 ஞாயிற்றுக்கிழமை 2013**

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் காலை நான்கு முப்பது மணி அளவில் மாநாட்டுத் திடலுக்கு வருகை தந்தார்கள். மேலும் பஜர் தொழுகையை தொழ வைத்தார்கள். தொழுகையை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது தங்குமிடத்திற்கு திரும்பி சென்று விட்டார்கள். காலையில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அலுவலக விவகாரங்களை நிறைவேற்றுவதில் மும்முரமாக இருந்தார்கள்.

**வெஸ்டர்ன் கனடாவின் ஆண்டு மாநாட்டின் நிறைவு அமர்வு'**

இன்று வெஸ்டர்ன் கனடாவின் ஆண்டு மாநாட்டின் மூன்றாவது மற்றும் நிறைவு நாளாக இருந்தது. நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப ஆண்டு மாநாட்டின் நிறைவு அமர்வின் நிகழ்ச்சிகள் 12:30 மணிக்கு தொடங்க இருந்தன.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது தங்கும் இடத்திலிருந்து 12:00 மணி அளவில் புறப்பட்டு 12. 25 மணி அளவில் மஸ்ஜித் பைத்துர் ரஹ்மானை வந்தடைந்தார்கள் மேலும் எங்கு ஜல்சாசாலானா நடைபெற்றுக் கொண்டிருந்ததோ அங்கு அந்த ஹாலிற்கு ஹுஸூர் அன்வர்(அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வருகை தந்தார்கள். திருக்குர்ஆன் திலாவத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. அன்பிற்குரிய அத்தாவுல் அலீம் சாஹிப் அவர்கள் திருக்குர்ஆன் திலாவத் செய்தார்கள். அதன் பிறகு அதன் ஆங்கில மொழியாக்கத்தை அஸீஸ் அஹ்மத் ஸாஹிபும் உருது மொழியாக்கத்தை நயீம் அஹ்மத் ஸாஹிப் அவர்களும் வாசித்தார்கள். அதன் பிறகு ஸபாஹத் அலி ஸாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உருது கவிதைகளை அழகிய முறையில் பாடினார்கள். பின்னர் அதன் ஆங்கில மொழியாக்கம் வாசித்துக் காட்டப்பட்டது.

**'கனடா ஜாமிஆ அஹ்மதிய்யா இரண்டாம் ஆண்டு பட்டமளிப்பு '**

இதன் பிறகு நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப கனடா ஜாமிஆ அஹ்மதிய்யா இரண்டாம் ஆண்டு பட்டமளிப்பு விழா நடைபெற்றது. அதில் ஹுஸூர் அன்வர் ( அய்யதஹுல்லாஹ் )அவர்கள் 2013ஆம் ஆண்டில் கனடா ஜாமியா அஹ்மதியாவி◌ருந்து ஷாஹித் பட்டம் பெறக்கூடிய 8 முபல்லிஃக் மார்களுக்கு தமது அருளுக்குரிய கரத்தால் சான்றிதழ்களை வழங்கினார்கள். மேலும் அந்த சந்தர்ப்பத்தில் மதரஸத்துல் ஹிஃபிழ் - வகுப்பிலிருந்து திருக்குர்ஆன் மனனம் செய்த மூன்று ஹாஃபிழ்களுக்கும் தமது அருளுக்குரிய கரத்தால் சான்றிதழ்களை வழங்கினார்கள்.

**'கனடா ஜாமிஆ அஹ்மதிய்யாவின் முதல்வர் ஆற்றிய உரை'**

இந்த பட்டமளிப்பு நிகழ்ச்சிக்கு முன்னர் கனடா ஜாமிஆ அஹ்மதிய்யாவின் முதல்வர் மதிப்பிற்குரிய ஸலீம் அக்தர் ஸாஹிப் கீழ்வருமாறு சொற்பொழிவாற்றினார்கள்:

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்
நஹ்மதஹு வ நுஸல்லி அலா ரஸூலுஹில் கரீம்
வ அலா அப்திஹில் மஸீஹில் மவ்வூத்

எனது தலைவர்! ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் கலீஃபத்துல் மஸீஹ் ( அய்யதஹுல்லாஹ்) அவர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் வ. ர. ப

எங்களுக்கு இந்த விஷயம் மிகவும் மகிழ்ச்சிக்கு காரணியாகும். அதாவது எங்களது எஜமானர் கனடா ஜாமிஆ அஹ்மதிய்யாவின் இரண்டாம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டிருப்பதற்காக நாங்கள் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் நன்றியுடன் சிரம் பணிவதற்கான சந்தர்ப்பமாகும்.

எங்களது பணிவான விண்ணப்பத்தை தாங்கள் ஒப்புக் கொண்டீர்கள். நாங்கள் உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஹுஸூர் அன்வர் ( அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு நன்றி செலுத்துகிறோம்.

அன்பிற்குரிய எஜமானரே! நாங்கள் முழுமையான பணிவுடன் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துகிறோம். எங்களது அன்பிற்குரிய இமாமின் சமூகத்தில் 8 முபல்லிஃக் மார்கள் எனும் இனிமையான கனிகளை சமர்ப்பிக்கும் நற்பேறை நாங்கள் பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

இதன் மூலம் அஹ்மதிய்யா ஜமாஅத் கனடா அல்லாஹ்வின் அருளால் இஸ்லாத்தின் பிரச்சாரத்தை பூமியின் எல்லைகள் வரை சென்றடைய செய்வதற்காக இது வரை இந்த மகத்தான ஜிஹாதில் 48 முபல்லிஃக் மார்களை சமர்ப்பித்து இருக்கிறோம். அல்ஹம்துலில்லாஹ் அலா ஸாலிக்.

மேலும் ஹுஸூர் அன்வர் அவர்களின் வழிகாட்டலின் படி 2011, செப்டம்பரில் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் ஹிஃப்ழுல் குர்ஆன் வகுப்பும் துவங்கப்பட்டது. கனடா ஜாமிஆ அஹ்மதிய்யாவின் வரலாற்றில் இதுவும் ஒரு அரிதான மற்றும் சிறப்பான சந்தர்ப்பமாகும். அதாவது இந்தப் பிரிவிலிருந்தும் மூன்று ஹாஃபிழ்கள் ஹுஸூர் அன்வர் அவர்களிடமிருந்து மூன்று ஹாஃபிழ்கள் தமது சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்கின்ற நற்பேறு பெறுவார்கள். இன்ஷா அல்லாஹ் கடந்த சில ஆண்டுகளாக ஜாமிஆ அஹ்மதிய்யாவின் மாணவர்களின் சேர்க்கையின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அதன் காரணமாக இயல்பாக உள்ளத்தில் கவலை ஏற்பட்டது. எனினும் ஹுஸூர் அவர்கள் இந்த வருடத்தின் துவக்கத்தில் (அதாவது) தனது 2013 ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் தேதி ஆற்றிய குத்பா பேருரையில் ஏனைய விஷயகள் மட்டுமின்றி ஜாமிஆவில் கல்வி பயில சேருதல் மற்றும் முபல்லிஃக்குகளாக ஆகுதல் மற்றும் அதன் முக்கியத்துவத்தை குறித்து பெற்றோர்களுக்கும் வஃக்வே நவ் பிள்ளைகளுக்கும் அறிவுரை வழங்கினார்கள். அதனால் சிறப்பான பலன் ஏற்பட்டது. இன்னும் கூட அந்த அளவிற்கான எண்ணிக்கை வந்துவிடவில்லை

இதன் தொடர்ச்சி...7-ம் பக்கம்.....

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad